மின்தமிழ் மேடை

"வரலாற்றை அழிவினின்று காப்போம்"

தமிழ் மரபு அறக்கட்டளை (www.tamilheritage.org)

வெளியிடும் காலாண்டு மின்னிதழ்

மின்தமிழ்மேடை - காட்சி: 9

ஏப்ரல் – 2017

மின்தமிழ் மேடை

காட்சி: 9

ஏப்ரல் - 2017

“வரலாற்றை அழிவினின்று காப்போம்”

முன்அட்டைப் படம்: கீழடி அகழாய்வுக்களம்

THF
தமிழ் மரபு அறக்கட்டளை

தமிழ் மரபு அறக்கட்டளை வெளியீடு

http://www.tamilheritage.org/

இதழ் தொகுப்பு: தேமொழி

தலையங்கம்: வரலாற்றை அழிவினின்று காப்போம்

வணக்கம்.

கீழடி ஆய்வுகள் இந்திய தொல்லியல் துறையினால் 2015ம் ஆண்டு ஜனவரி மாதம் தொடங்கப்பட்டு அதன் பின்னர் மீண்டும் மார்ச் மாதம் அடுத்த கட்ட ஆய்வு நடைபெற்றது. இதில் கட்டிடங்களின் அடித்தள அமைப்புக்கள், மட்பாண்டங்கள், அணிகலன்கள், செங்கற்சுவர்கள் சுடுமண் குழாய்கள், கழிவுநீர் தொகுதிகள், உறை கிணறுகள் மற்றும் ஏராளமான தொல்லியல் சான்றுகள் ஆய்வின் போது கிடைத்தன. தமிழரின் வாழ்வியல் பண்பாட்டு மேன்மைக்கு நீண்ட வரலாறு உண்டு என்பதைப் பறைசாற்றும் சான்றுகளாக இங்குக் கிடைத்த தொல்லியல் சான்றுகள் உள்ளன. தொல்லியல் ஆய்வுலகம் மட்டுமன்றி, பொது மக்களும் தமிழகத்தின் இந்தப் பண்டைய நாகரிகத்தினை அறிந்து கொள்ள பெருமளவில் ஆர்வம் காட்டிவந்தவண்ணம் இருக்கின்றனர்.

இதற்கிடையே, கீழடி தொல்லியல் ஆய்வுகள் தடைப்படுவதும் மீண்டும் தொடங்கப்படுமா என்ற ஐயங்கள் எழுவதும் என்ற நிலையிருந்து பின் மீண்டும் தொடங்கப்பட்டது. இதன் தொடர்ச்சியாக கடந்த வாரங்களில் அதன் தலைமை ஆய்வாளர் கி.அமர்நாத் ராமகிருஷ்ணன் மற்றொரு ஆய்வுப் பகுதிக்கு அனுப்பும் நடவடிக்கை என இந்தப் பிரச்சனை தொடர்கின்றது . இப்படி கீழடி அகழ்வாய்வுப் பணிகள் தொடர்ந்து சர்ச்சைக்குள்ளாகி வருவதைக் காண்கின்றோம். கடந்த ஆண்டு பெங்களூர் ஆராய்ச்சி மையத்திற்கு அனுப்பப்பட்டு 5,300 தொல்பொருட்கள் ஆய்வு அங்குச் செய்யப்பட வேண்டும் என ஒரு பிரச்சனை எழுந்தது. பொதுமக்கள் எதிர்ப்பு ஏற்பட்டு வழக்குகள் தொடரப்பட்டபின் அவை அனுப்பப்படாமல் நிறுத்தப்பட்டன. பெங்களூர் அரசு மையத்திற்குச் சென்று ஆய்வுக்குட்படுத்தப்பட்ட பின்னர் மீண்டும் அவை திரும்பி தமிழகம் வருமா? அல்லது அவை முறையான ஆய்வுகளுக்கு உட்படுத்தப்பட்டு பொதுமக்கள் பார்வைக்குக் காட்சிக்கு வைக்கப்படுமா என்பதும் கேள்வியாகத்தான் இன்றும் இருக்கின்றது. மைசூர் தொல்லியல் காப்பகத்தில் இருக்கின்ற ஏராளமான தமிழக கல்வெட்டுக்கள் பூட்டிய அறையில் இன்னமும் இருக்கின்றன என்பதும் அவை பற்றிய பல சந்தேகங்கள் தொடர்ந்து எழுப்பப்பட்டு வருவதும் நிகழ்ந்து கொண்டுதானிருக்கின்றது. இத்தகைய செயல்பாடுகளின் போது தமிழக தொல்லியல் துறை தமிழகத்தில் இவ்வகை ஆய்வுகள் பாதிப்புக்கள் இல்லாமல் தொடரும் நிலையைக் கண்காணிக்க வேண்டும் என்பதே தமிழ் மரபு அறக்கட்டளையின் எதிர்பார்ப்பு.

"சேந்தன்அவதி எனும் பெயர் கொண்ட தமிழ் பிராமி

பெயர் பொறித்த தமிழ் பிராமி பானை ஒடு

தமிழகத்தின் இன்றைக்கு ஈராயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட ஏனைய உலக நாடுகளுடனான கடல்வழித் தொடர்பினையும், தமிழர் நாகரிகத்தையும், சமூக நிலைகளையும் பற்றிய தொடர்ச்சியான வரலாற்றுச் செய்திகள் மிகக் குறைவாகத்தான் கிடைக்கின்றன. தமிழகத்தின் பண்டைய துறைமுகப்பட்டினங்களிலும், சங்க இலக்கியங்கள் சுட்டும் நகரங்களிலும் தொடர்ச்சியான ஆய்வுகள் நிகழ்த்தப்பட்டால் தான் பண்டைய தமிழர் நாகரிகத்தை ஊகங்களின் அடிப்படை என்றில்லாமல், தக்கச் சான்றுகளுடன் அறிந்து கொள்வதற்கு வாய்ப்புக்கள் அமையும். இதனைச் செய்வதற்கு தமிழக தொல்லியல் துறை வெகுவாக இயங்க வேண்டிய அவசியம் உள்ளது.

இன்றைய நிலையில், வரலாற்று ஆய்வுகள் மற்றும் தொல்லியல் அகழ்வாய்வுகள், கல்வெட்டு மற்றும் நடுகற்கள் ஆய்வுகள் என்ற வகையில் தன்னார்வலர்களின் சில முயற்சிகள் தொடர்ச்சியாக விழிப்புணர்வை ஏற்படுத்தி வருகின்றன. இதற்கு ஏதுவாகத் தமிழக தொல்லியல் துறை ஒவ்வொரு ஊரிலும் ஒரு தொல்லியல் அருங்காட்சியகம் ஏற்பட வாய்ப்புகளை உருவாக்கித்தரவேண்டும். இது அந்தந்த ஊர்களில் கிடைக்கின்ற கவனிப்பாரற்று கிடக்கின்ற வரலாற்றுச் சான்றுகளைப் பாதுகாக்க உதவும்.

அன்புடன்
முனைவர்.சுபாஷிணி
ksubashini@gmail.com

படம் உதவி மின்தமிழ் குழும உறுப்பினர்: முனைவர் காளைராசன்
மேலதிகமான படங்கள்
https://drive.google.com/drive/folders/0B02g7RFB0HureWF6S1o5S2xWRk0?usp=sharing
இந்த முகவரியில் உள்ளன.

மின்தமிழ் மேடை - காட்சி: 9; ஏப்ரல் - 2017

இந்த இதழில் "வரலாற்றை அழிவினின்று காப்போம்....."

(மின்தமிழில் ஜனவரி 16, 2017 - ஏப்ரல் 15, 2017 வரை பதிவான படைப்புகளின் தொகுப்பு)

வரலாற்றை அழிவினின்று காப்போம் - தலையங்கம்
முனைவர் சுபாஷிணி **(பக்கம்: ii)**

1. **கீழடி ஆய்வும் அதன் காலக் கணிப்பு முறையும்**
நூ த லோ சு **(பக்கம்: 1)**
2. **கொல்லிமலை அறப்பளீசுவரர் கோயில் கல்வெட்டு தரும் செய்தி**
நூ த லோ சு & து.சுந்தரம் **(பக்கம்: 4)**
3. **வேம்பற்றூர் தமிழ்ப் புலவர்கள்**
நூ த லோ சு **(பக்கம்: 7)**
4. **மானாமதுரை கல்வெட்டு**
முனைவர் கி. காளைராசன் **(பக்கம்: 26)**
5. **தேன்கனிக்கோட்டை சோழர் கால சுவர்க்க கல்வெட்டு தரும் செய்தி**
து.சுந்தரம் **(பக்கம்: 32)**
6. **அரசகுலப் பெண்கள் போர்செய்யும் காட்சி கொண்ட நடுகல்**
அறம் கிருஷ்ணன் **(பக்கம்: 36)**
7. **பாணாவாளி அகழாய்வு சிந்து முத்திரையில் ஏறு தழுவல் விளையாட்டு**
சேசாத்திரி சிறீதரன் **(பக்கம்: 40)**
8. **ஏறு, எருது, காளை**
நூ த லோ சு **(பக்கம்: 43)**
9. **21.1.2017 - கோலாலம்பூரில் நடைபெற்ற த.ம.அ கருத்தரங்கம்**
முனைவர் சுபாஷிணி **(பக்கம்: 46)**
10. **அது என்ன டெல்டா?**
சிங்கநெஞ்சம் சம்பந்தம் **(பக்கம்: 51)**
11. **காமராசரும் கல்வியும்**
இராம.கி. **(பக்கம்: 54)**
12. **பகவத்தஜ்ஜூக அங்கதம்**
கௌதம சன்னா **(பக்கம்: 60)**
13. **திருப்பதி - திருமலை தோரணக் கல்**
சிங்கநெஞ்சம் சம்பந்தம் **(பக்கம்: 62)**
14. **விழுப்புரம் வடக்கு இரயில்வே காலனி...**
கோ.செங்குட்டுவன் **(பக்கம்: 65)**
15. **சீகன் பால்கு ஆரம்பித்த பள்ளிக்கு 300 வயது**
சிங்கநெஞ்சம் சம்பந்தம் **(பக்கம்: 72)**
16. **அருவம்**
பழமைபேசி **(பக்கம்: 75)**
17. **எழுத்துக்களை ரத்த சதையாக்கிய அசோகமித்திரன்**
ருத்ரா இ.பரமசிவன் **(பக்கம்: 76)**
18. **ஒரு ஃபோட்டோ நெகடிவ்**
ருத்ரா இ.பரமசிவன் **(பக்கம்: 79)**
19. **ஞான ஒளி**
ருத்ரா இ.பரமசிவன் **(பக்கம்: 83)**
20. **தமிழ் மரபு அறக்கட்டளையின் வெளியீடுகள்** **(பக்கம்: 86)**

1. கீழடி ஆய்வும் அதன் காலக் கணிப்பு முறையும்

நூ த லோ சு

கீழடி அகழாய்வில் கண்ட பொருட்களைக்கொண்டு அங்கு வாழ்ந்தோரின் நாகரீக காலம் கணிக்க வேண்டும் என்றபோது அங்குக் கிட்டிய பொருள்களில் காணும் கரிம பொருட்களை க் கொண்டு கணிக்க "ரேடியோ கார்பன்" (கதிரியக்கக் கரிமம் 14) எனும் வழி முறை உள்ளதை அறிவோம். அதன் விளக்கத்தை விக்கிப்பீடியாவில் காணலாம் (en.wikipedia.org/wiki/Radiocarbon_dating).

கரி அணுக்களில் கரிமம் 14 என்பது கதிர் இயக்கம் வெளிவிடும் இயல்பினது. ஓர் வளரும் பொருள் (அதாவது, கரிமப்பொருள்) இவ்வகை கரியம் 14 (கோடியில் ஓரிரு) அணுக்களையும் சேர்ந்து வளர்ந்துவிடும் எனும் உண்மையைக்கொண்டும், இப்போது அந்த கருமப் பொருளில் கரிமம் 14 எனும் அணு வகையைச் சார்ந்த அணுக்களிருந்து வெளிவரும் கதிரியக்கம் நொந்து போகும் அளவினை அளந்து அதன் இப்போதைய காலம் தெரிய வரும். அதனால் அகழாய்வினில் கண்ட பொருளின் காலம் கணிக்கப்படும்.

சுடுமண் சார்ந்த பானை ஓடு போன்ற கரிமம் அல்லாத பொருட்களுக்கு "சுட்டு ஒளிர் நோக்கல்" (தெர்மோலுமினேசசென்ஸ் / Thermoluminescence) எனும் முறை உள்ளது. இதனைப்பற்றிய விவரங்களுடன் அவ்வகை சிறப்புமுறை ஆய்வு மேற்கொள்ளக்கூடிய ஓர் வாணிபவகை நிறுவனமாகும். காணலாம் (www.oxfordauthentication.com/about-us/the-laboratory-and-the-tl-testing-process/).

இதனில் சுடுமண் சார்ந்த பொருள்களின் ஊடே காணும் கதிரியக்க அளவினைக்கொண்டே அப்பொருளின் காலம் கணிக்கப்படுமாம்.

முன்பு முதுசொம் (தமிழ் மரபு அறக்கட்டளை / Tamil Heritage Foundation) வலைத்தளங்களில் மறைந்துள்ள நொய்யலாற்றுப்படுகை ஓடுகள் போரூர் மடாலயத்திலிருந்து பெற்றவை பற்றிய ஆய்வு நோக்கும் முயல்வினில் தேடியபோது இந்தியாவில் நாகாலாந்து பல்கலைக்கழகத்தில் இதற்கான 'தெர்மோலுமினேசசென்ஸ்' ஆய்வுக்கூடம் இருப்பதை நான் கண்டு குறித்தது நினைவில் வருகின்றது



மற்றொன்றும் உள்ளது இதற்கு 'ஆக்டிவேஷன் அனாலிசிஸ்' (Avation analysis) இதுவும் கதிரியக்க காலக் கணிப்பு வகையைச் சார்ந்ததே. இதனைக்கொண்டு ஒரு பொருளில் காணும் வெவ்வேறு வகை மூலகங்கள் (அணுக்கள்) எத்தனை சத்தம் உள்ளது என்பதைக் கணிக்க முடியும். இதனைக் கொண்டு கண்ட பொருட்களில் இவை இவை பொருள் ஒரே இடம் சார்ந்தது / அல்லாதது என வேறுபாடு கணிக்க முடியும்.

இந்த 'ஆக்டிவேஷன் அனாலிசிஸ்' கொண்டுதான் நெப்போலியன் போனபார்ட் எனும் பிரஞ்சு நாடாண்டவன் எப்படி ஆர்சினிக்கு எனும் விஷப்பொருளை சிறிது சிறிதாக உணவில் கலந்து

பிரிட்டிஷாரால் கொல்லப் பட்டார் எனும் உண்மை அவரின் பாதுகாக்கப்பட்ட மயிர்க்கற்றையில் கண்ட ஆர்ஸினுக்கு எனும் மாழை ஒத்த அணுவின் அளவினால் கண்டுபிடித்தனர்.

கீழ்க் காணும் இந்தச் செய்தியில் முன்பே காலம் காட்டும் பண்புகளுடன் கண்ட பானைஓடுகளில் காணும் இரும்பு அணுக்களின் தன்மையினைக்கொண்டு இப்புவியில் புவியீர்ப்பு ஆற்றல் எப்படியெல்லாம் மாறி வந்துள்ளது என்பதை காண்கின்றனராம்.

ANCIENT POTTERY RECORDED GEOMAGNETIC FIELD FLUCTUATIONS

Monday, February 13

TEL AVIV, ISRAEL—Live Science reports that Erez Ben-Yosef of Tel Aviv University and his colleagues measured fluctuations in the strength of the Earth's magnetic field using a collection of pottery jugs dating to between the eighth and second centuries B.C. The jugs were marked some 2,500 years ago with administrative stamps by the bureaucracy of the kingdom of Judah, and then fired. The heat locked information regarding the Earth's geomagnetic field into the iron-containing minerals in the clay, while the stamps provide precise dates. The study suggests that in the Levant, the strength of the magnetic field "fluctuates quite rapidly," but because the precise locations of where the pottery was fired are not known, the scientists can't determine the direction of the geomagnetic field based on it. The research could help lead to a system of dating heated materials based upon their magnetic properties. For more on archaeology of the kingdom of Judah, go to "Cults of the Bronze Age."

www.archaeology.org/news?page=2

படங்கள்: இணையத்திலிருந்து

நூ த லோ சு (நூ.த.லோக சுந்தரம்)
மயிலை
selvindls61@gmail.com

2. கொல்லிமலை அறப்பளீசுவரர் கோயில் கல்வெட்டு தரும் செய்தி

நூ த லோ சு & து.சுந்தரம்

நூ த லோ சு: இணைய உலாவினில் கண்ட கொல்லி மலை அறப்பளீசுவரர் கோயில் கல்வெட்டு ஒன்றின் படம் கருப்புவெள்ளைப் படமாக மாற்றிக் கொடுக்கப்பட்டுள்ளது.
இதனில் உள்ள வரிகளின் செய்தி என்ன சொல்கிறது? இக்கல்வெட்டு எந்தக் காலகட்டம் சார்ந்தது?

ref: http://tamilnadu-favtourism.blogspot.com/2015/12/arapaleeswarar-temple-kolli-hills.html

image: http://4.bp.blogspot.com/-c61CHOwxQcY/VnveF44HqnI/AAAAAAAAVOM/RptEEpa4hvc/s640/IMG_0662.jpg



கல்வெட்டு அறிஞர் திரு துரை சுந்தரம், கோவை:

கல்வெட்டுப் பாடம் :

1 **மாஹேச்வரருமாய் ஆராய்ந்து தண்டமுங் கொண்டு முட்...**

2 (து)ந்மம் இறக்குவான் வழி ஏழச்சமறுவாந் ரக்ஷித்தாந் ஸ்ரீ பா(தம்)

3 (ள்)வது மழபெருமாள் மருமகள் கண(லை?) தாதியார் (அணிமக்க/ அணிமுரி ?)

4 நாளுக்குத் திருவி(ள)க்குக்கும் தகணிக்கும் கொல்லிமலை நாட்டார்............

5 யேழச்சம் மறுவாந் ரக்ஷித்தாந் ஸ்ரீபாதமென் தலை மேல(ன)

6 ந்திக்கு திரு ....க்கும் ....

மாகேசுவரர் என்போர் கோயில் நிவந்தங்களைக் கண்காணிக்கும் நிர்வாகிகள்.
முதலிலேயே, ஒரு நிவந்த தன்மதத்தைத் தடுப்பவன் ஏழு பிறவிகளிலும்
எச்சம் (மக்கள் பரம்பரை) இல்லாமல் போவான் என்றும், தன்மத்தைக்
காப்பவன் பாதத்தைத் தலைமேல் வைத்து வணங்குவேன் என்றும் குறிப்பிட்டுவிட்டுப்
பின் பகுதியில் கோயிலுக்கு அளிக்கும் விளக்குக் கொடை பற்றிக் கல்வெட்டு
கூறுகிறது. கொல்லிமலை நாட்டார் பொறுப்பில் கொடை தரப்படுகிறது போலும்.
கொடை, திருவிழா நாள்களுக்கும் சேர்த்தே தரப்படுவதாகத் தெரிகிறது.
கொடையாளி ஒரு பெண்மணி என்பது
குறிப்பிடத்தக்கது. அவள், மழபெருமாள் என்பவரின் மருமகள் என்று
கருதலாம். அணிமக்க/ அணிமுரி   என்று படிக்கும் வண்ணம் உள்ள
எழுத்துகளின் பாடம் ஐயமாக உள்ளது. காலம் சோழர் காலமாக இருக்கலாம்.
எனில், 11-13 நூ.ஆ. எனக்கொள்ளலாம்.
குறிப்பு : சிவப்பு வண்ண எழுத்துகளும் “ஸ்ரீ” யும் கிரந்த எழுத்துகள்.

நூ த லோ சு (நூ.த.லோக சுந்தரம்)
மயிலை
selvindls61@gmail.com

து.சுந்தரம்
கல்வெட்டு ஆராய்ச்சியாளர் கோவை.
doraisundaram18@gmail.com
அலை பேசி : 9444939156

3. வேம்பற்றூர் தமிழ்ப் புலவர்கள்

நூ த லோ சு

வேம்பற்றூர் பிறந்த தமிழ்ப் புலவர்களின் தனித்தன்மை பற்றி:-

இவர் உலக வரலாற்றில் குறிக்கப்பட வேண்டியவர்கள் என்றால் மிகையாகாது யாது ? எங்ஙனம்??

ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்பும் தமிழ் நாட்டு மதிரையில்* நடந்த மூன்றாம் தமிழ் சங்கம் சார்ந்த நூல்களாம் பத்துப்பாட்டு எட்டுத்தொகை முதலியன வற்றில் ஒன்றான குறுந்தொகை பாடல் 362 தனை இயற்றியவர் இந்நாள் மதுரை அருகமைந்த வேம்பற்றூர் சேர்ந்தவராகும் எனக் காட்டுகின்றது தமிழ் இலக்கிய வரலாறு

குறிஞ்சி - தோழி கூற்று

முருகயர்ந்து (உ)வந்த முதுவாய் வேல
சினவல் ஓம்புமதி வினவுவது (உ)டையேன்
பல்வேறு(உ)ருவில் சில்அவிழ் மடையொடு
சிறுமறி கொன்றிவள் நறுநுதல் நீவி
வணங்கினை கொடுத்தி யாயின் அணங்கிய
விண்தோய் மாமலைச் சிலம்பன்
ஒண்தார் அகலமும் உண்ணுமோ பலியே

[வேம்பற்றூர்க் கண்ணன் கூத்தனார்] குறுந்தொகை 362

உலக வரலாற்றிலேயே வேறெங்குமே காணமுடியாத ஓர் (தமிழ்) மொழியின் இலக்கியநூல் ஆகும். சிராமலை அந்தாதி 100+ கட்டளைக்க கலித்துறைப் பாடல்களும் (416 வரிகள் ஏறக்குறைய 6600 எழுத்துக்கள்) திருச்சிராமலை மலை மேல் கோயில் கல்வெட்டுகளாகவே பொளிக்கப்பட்டுள்ளன .

ஆயிரம் ஆண்டுகள் பழமை பெற்ற இந்தச் செயல் (ஆவணம்) மதம் நிறம் நாடு காலம் ஒருவர் தான் சாராத ஓர் துறை என வேறுபாடுகள் பாராது மிக அரி ய உலக மனித முயற்சிகளில் ஒன்றே எனும் கருத்தில் உலக நாடுகள் அவையில் குறிக்கப்பட வேண்டிய தே ஆகும் இதற்கு இணையானவை வேறெங்கும் காணவும்

இயலாது எனலாம் இந்தக் கல்வெட்டு இன்றைக்கு (2017) 135 ஆண்டுகளுக்கு முன்பே படியெடுக்கப் பட்டுதான் நூலாக வெளிவந்துள்ளது.
என்மதுரைத் திட்ட பதிவினில் இதனின் மேலும் பல விவரங்களை வைத்துள்ளேன் படித்துணரலாம்

வேம்பையர்க்கோன் தமிழ்நாராயணன் இயற்றிய "சிராமலை அந்தாதி"

நூல் அறிமுகம்:
திருச்சிராப்பள்ளி நகர்க்குன்றுப் பாறைகளின்மேல் கட்டப்பட்டுள்ள தாயுமானவர் கோயில் படிவழியில் காணப்படும் பல்லவமன்னன் முதலாம் மகேந்திரவர்மன் அமைத்த குடைவரைக் கோயிலின் பின்புறச்சுவர் தனில் பொளித்துள்ள கல்வெட்டாகக் காண்பது இந்நூல். தென் இந்தியக் கல்வெட்டுத் தொகுதி IV எண் 167, பக்கங்கள் 21-27(A R 62 of 1888). இ்ஃது 102 கட்டளைக்கலித்துறைப் பாடல்களால் ஆனது. பலபாடல் வரிகள் சிற்சில இடங்களில் சிதைந்துள்ளதால் பொருளறி இடர்பாட்டுடன், கல்வெட்டுகளுக்கே இயல்பான எழுத்துப் பொறி வினைஞரால் வரும் சொற் பிழைகளுடன் படியின் பதிப்பினில் கண்டவாறே ஈங்கு படைக்கப் பட்டுள்ளது.. சிதைந்த பகுதி [. . .] எனவும் () என உடுக்குறிக்குள் காண்பவை படி எடுத்தோரோ பிறரோ ஐயமுடன் சேர்த்த பகுதி ஆகலாம். இக்கல்வெட்டின் காலம் 900-950 ஆகலாம் எனக் கணித்துள்ளனர்.

இதன் ஆசிரியர் மணியன்மகன் வேம்பையர்க்கோன் தமிழ்நாராயணன் என இதன் 90 வது மற்றும் 103, 104 பாயிரப் பாடல்களால் அறியலாகும். மாடமதிரை-மணலூர், மதில் வேம்பை சேய்ஞலூர், குண்டூர் எனும் நான்கு ஊர்களுக்குத் தலைவராக சொல்லப்பட்ட இவர் சைவ சமயப் பற்றுடையவரென்பது தேற்றம். 34, 35 பாடல் வரிகள் பரிசில் வாழ்க்கையரோ என ஐயம் தோற்றுவிக்கிறது.

'பாட்டியல்' மரபிலேயே 'உலகமடந்தை' என மங்கலச் சொல்லால் தொடங்கி, அந்தாதித் தொடையமைந்து, 'உலகத்துளே' என 102 பாடலில் மண்டிலத்து, கட்டளைக்கலித்துறை யாப்பும் உள்ளமையால் இந்நூல் ஓர் அந்தாதியாம். அக்காலத்துக் கல்வெட்டு பொளிக்கும் மரபினிலேயே 'ஸ்வஸ்தி ஸ்ரீ' எனத் தொடக்க எழுத்து பொறிக்கப்பட்து போலும்.

பாடல்களில் பல கோவைத் துறைகள் பொருந்தக் காண்கின்றன. இயற்கை வருணனை, மற்றும் சொல்-பொருள் அணிகள் பலவற்றினில் பயின்று வந்துள்ளன. சிவன்தன் வீரச் செயல் போற்றும் பாடல்கள் சைவத்திருமுறை வரிகளை நினைவு கூர்கின்றன. பாடல் பெற்ற 'சிராப்பள்ளி'க் குன்றினில் அமர்ந்த சிவபெருமானை போற்ற எழுந்த இந்நூல் சிறிதே மேற்கினில் ஓர் அறைமேல் உள்ள 'கற்குடி' எனும்

மூவர் தேவாரப் பாடல்பெற்ற தலம் மற்றும் 'மருதாடு' எனும் தலப் பெருமானையும் 75 வது பாடலில் குறிக்கின்றது. 67 ஆம் பாடலில் தில்லைநகரில் சோழ மன்னர்மாளிகை, 'முடிகட்டிய' மூவாயிரவர் என்பன குறிக்கப்படுகின்றன.

ஸ்வஸ்தி ஸ்ரீ

1

உலக மடந்தை நுதலுறைந் தைப்பதி யந்நுதற்குத்
திலதம் பரமனமருஞ் சிராமலை யம்மலைவா
யலகின் னிறைந்த கதிர்மணி பாய . . மேல் வந்ததந்தாதி
. . ப் பொன்னி பரன்கழுத்திற் கொண்ட வெள்வடமே

2

வடகயி லாயமுந் தென்மான் மலயப் பொருப்புமென்னுந்
தடவரை தாமிதன் றன்மைய வாவது தாம் உணர்ந்துங்
கடவரை மேக முழக்குஞ் சிராமலை கண்ட (கண்)
முடவரை ய(க்கு மறுசான்) றெண்ணி மொழிகின்றதே

3
மொழிந்திடு மெய்மை முனிந்திடும் பொய்மை முயன்றிடுமின்
கழிந்திடும் யாக்கையைக் கைப்பணி கோடல் கருமுகில்வான்
பொழிந்திடு மெல்லருவிச் சிராமலை புகுந்திடுமி
னிழிந்திடு நும்வினை யீசனங் கேவந் தெதிர்ப்படுமே
4
படும்பொழு தாயிற்று வெங்கதிர் கூற்றுவன் பற்றிநம்மை
யடும் பொழு தாவஞ் சலென்பான் சிராமலையர் ஏரிவந்
திடும்பொழு தாயிற் றெதிர்கண் டிடிலெ மருங்கொடியர்
நெடும்பொழு தாலென்கலோ அந்பர் நீர்வந்து நிற்கின்றதே
5
நிற்குந் துயர்கொண் டிருக்கும் பொழுதின்றி நெஞ்சனுங்கி
தெற்கும் வடக்குந் திரித்தே வருந்திச் சிராமலைமேற்
பொற்குன் றனைக்கண்டு கொண்டே னினிப்புறம் போகலொட்டேன்
கற்குன் றனையநெஞ் சிற்செல்வ ராலில்லை காரியமே
6
காரி(க் குதவார்) கடவுட் கிறைச்சியுங் கள்ளுநல்கு
மோரிக் குரற்பெண்க ளன்றறி யீரொரு பால்குறவர்
சேரிக் கொடுமுடித் தெய்வச் சிராமலைத் தெண்மணிநீர்
வாரிக் குளிக்க வொளிக்கு மெய்(ந்நோ)யி மடவரற்கே
7
மடக்கோல் வளையிடத் தான்றன் சிராமலை வாழ்த்திலர்போல்
படக் கோ நிலமன்னர் பாவையைப் பேசிப் பரிசமிட்டார்
விடக்கோ கிடந்த(ன) வேளர் (வரையார்) கொள் வாள்¨ணைந்தார்
தடக்கோ வெள்ளிப்படுத் தார்மற வீரநுங்கள் சுற்றத்தையே
8
சுற்றத்தை நீயத்திநின்ற சூள்புணை யாகச் சுரம்படர்ந்த
நற்றத்தை பெரலிக்கு நல்குகண் டாய்பண்டு நாடறியப்
பெற்றத்தை யேறும் பெருமான் சிராமலை மேலோர்சேர்
குற்றத்தை நீக்குங் குணத்துர வோர்தங்கள் கோளரியேய்
9
கோளரி யேறு போலக்கொல் யானையைக் கொன்றுதிங்கள்
வாளரி யேறு கண்ணா யிருந்தவன் மால்கடல்வா
யாளரி யோறிடத் தாண்டான் சிராமலை ஜவனமாந்
தோளரி யேறு (தஞ்சம)¡ ரிதற்கு தலைமகளே
10
தலைமக . . பரனொரு வன்னவன் தம்பி கொம்பார்
குலைமுக யானைத் தலையின் னவர்தா யலைமலையாள்
முலைமுக நீயமயங்கி மயங்கிற்றுன் முன்மையென்னோ

சிலைமுக நீடு திருமலை மேய திகம்பரனே

11

பரந்தெரி . . . . ன்றுக ளாகிப் பகையுறனச்
சரந்தெரி கானவர் தம்யை . . . க தடமலரோன்
சிரந்தொயா வொள்வலி சதித்த வீரன் சிராமலைபோலுந்
. . . . வானுடன் போன வொள்வளைக்கே

12

வளைவர . . ய வந்து காணமணி நாளில்வந்த
முளைவா யெயிற்று முதவச் சிராமலை முடியிலவிள்
களைவாய் சொரிந்த பெருந்தேன் சுடர்தோய் நறுங்கமலத்
தளைவாய்த் தேனருந் தச்சுரும் பார்க்கின்ற தண்பரணியே

13

பரணித் தலையா வலவர்கள் பெறுகுரு ரம்பைக் கிளைமல்லழுத்தங்
கரணத் தடங்கண் மலர்கா தளவும்முன் காரதிருந்
திரணைத் தடஞ் சாரற் பரமன் சிராமலை சூழ்சுளை
திரணைத் தாங்கப் பிடித்துடி யறுகேநின்ற பாயமயிற்கே

14

மயிலார் . . க . . மென்று பேரகில் வஞ்சி யென்று
பயிலாக் கிளியும் மயிலும் படைக்குணகன் பார்த்துழைமா
னயிலா தொழிகி லவைவளங் காவலெவ் வாறமைந்தார்
வெயிலார் மழுவன் சிராமலை வாழ்நர்தம் மெல்லியற்கே

15

மெல்லிய . . க . . மலைக்கு மெய்ப்பொருள் வேண்டுமெனச்
சொல்லிய கோவிற் கருள்செய் தவன்சூ ழலும்முகிலை
வல்லிய மால்களி றென்றுதன் வாளுகி ராறக்கதுவச்
செல்லிழிச் சாரற் சிராமலை மேய திருவடியே

16

வடிக்குங் கருங்குழல் மேலுமைத் தாள்மொய்த்த வண்டகற்றிக்
கொடிக்குங் குமக்கொங்கை மேலுங்கொண் டாள்கொண் டலந்திமந்தி
பிடிக்குஞ் சிராமலை யாதிதன் பேரருள் போல நன்றுந்
தடிக்குங் கலையல்கு லாள்லின்ப நீதந்த தண்ட¨ழுயே

17

தழைகொண்ட கையர் கதிர்கொண்ட மெய்யர் தளர்வுகண்டு
பிழைகொண்டு மெய்யென்று பேசிவிட் டோறகவர் பேரருளான்
மழைகொண்ட கண்டர்தம் மானீர்ச் சிராமலை வந்து நின்றா
ருழைகொண்ட நோக்கியின் றென்னுரைக் கேனவ ருற்றுடிலே

18

உற்றார் தலையிட வொன்னார் முகந்த உண்டுமிக்க
துற்றா ரிடுவ ரெனத்தொழு தோங்குந் தெழார்புரங்கள்

செற்றார் சிராமலை சேரவல் லார்திரு நாமமெல்லாங்
கற்றார் கனைகழல் கண்டிறைஞ் சாதவர் கைத்தலமே
19
கைத்தலை கராமலை நெல்லிக் கனிபோல் கலைகளெல்லா
மெத்தலைப் பாடு விதியுணர்ந் தோர்தங்கள் வீதியெங்குஞ்
செய்த்தலை நீல மலருஞ் செழுநீர் சிராமலையான்
பைத்தலைப் பாம்புகண் டீரரை மேற்கொண்ட பட்டிகையே
20
பட்டிப் பசுமுன் படரத் துடர்ந்துநின் பாடுசொல்லின்
முட்டித் திரியு முகில்போ லதிரு முரட்கயிற்றாற்
கட்டிக்கொ டாளுங் கருமஞ்சொன் னோங்கண்ணி காரமெங்குங்
மட்டிக் கமழுஞ் சிராமலை யீர்நும் மதவிடையே
21
மதவிடைப் பாகன் மதியிடைப்பாகன் மழைநிறத்தோர்க்
குதவிடப் பாக னுமையிட பாக னுயர்கலிங்கு
கவிடப் பாகு கமுகெழக் காமர் கடிநகர்வாய்ப்
புதமடப் பாய்புனற் பொன்னிச் சிராமலைப் பொன்வண்ணனே
22
பொன்வண்ண மாளிகைப் பூந்தண் சிராமலைப் பள்ளிகொண்ட
மன்வண்ண மால்கட னஞ்சம் மிருந்த மறைமிடற்றான்தன்
வண்ணந்தி வண்ணங் கண்டு தளிர்வண்ணம் வாடிச்சென்றான்
மின்வண்ண நுண்ணிடை யாளெங்ங னேசெயு மெய்ப்பணியே
23
பணியா வதுநஞ் சிராமலை மேய பரமற்கென்று
துணியா டையு மணிவாய் நன்றுந்துவ ரூட்டிக்கொங்கை
பிணியா தொழிந்தனை §உ¡ர்மனத் தேய்ப்பிணிப் பான்றுடையா
யணியா ரடிகள் பழந்தவஞ் சால வயிர்ப்புடைத்தேய்
24
அயிர்ப்புடை யாய்நெஞ்ச மேயினித் தேறர மங்கையல்லள்
செயிர்ப்புடை யார்தந் திரிபுரஞ் செற்றான் சிராமலைவாய்
பயிர்ப்புடை யா ளடிப் பார்தோய்ந் தனபடைக் கண்ணிமைக்கு
முயிர்ப்புடை யாளிவ் வுலகுடை யார்பெற்ற வொல்கிடையே
25
கிடைவாய் மடந்தையும் மைந்தனுங் கேட்கிற் சிராமலையா
ளடைவா யவரை யணையார் கிளைபோ லழிந்துபட்டார்
கடைவாய் நிணந்தன்ற பாவிதன் காதற் கரும்பொடையின்
முடைவாய் புகச்சொரி முண்மாக் களத்து முன்பினரே
26
முன்வந்து நின்றனை யென்னுரைக் கேன்முகிழ் மென்முலைக்கீழ்

மின்வந்து நின்றனன் நுண்ணிடை யாய்விதி யேவலிந்த
பொன்வந்த கொன்றையார் பூந்தண் சிராமலை போற்றலர்போல்
பின்வந்து வன்கா னவர்கைப் பாடும் பெருஞ்சுரத்தே
27
பெருஞ்சிலை யாற்புர மூன்றெரித் தோன்பிறைக் கோட்டுக்கைம்மா
வுரிஞ்சிலை தேங்கமழ் பாங்கற் சிராமலை யுள்ளலர்போல்
வருஞ்சிலை யோர்நும ராகின் மறைவன்வன் கானவரேற்
கருஞ்சிலை யாலழிப் பன்கலங் காதுநிற் காரிகையே
28
காரிகத் தாழ்பொழிற் கண்ணார் சிராமலைக் காமர்கொன்றைத்
தாரிகத் தாழ்சடைச் சங்கர னேசதி ரொப்பனகோ
பாரிகத் தாழுநின் பாதம் பணிந்தவ ரேமதஞ்ச
வோரிகத் தாவருங் கானகத் தாடி யுறைகின்றதே
29
உறைவாய் சிராமலை யுள்ளுமென் சிந்தையி னுள்ளுமென்றும்
பிறைவாய் மழுவாட் பெரியவ னேநுன் பியற்கணிந்த
கறைவா யரவங் கடியா வகையடி யேனறியே
னறைவா யழலுமி ழும்புரிந் தாடி யலருமே
30
அலமரு வெஞ்சத் தரிவைகண் டாற்றுங்கொல் போற்றலர்தங்
கலமரு முப்புரங் கொன்றவன் கோலச் சிராமலைசூழ்
நிலமரு தென்றுளி நித்திலங் கோப்ப நெடும்பொழில்கள்
சலமரு வெள்வடம் பூணத்தண் கானெடுந் தாழ்பனியே
31
புனிப்படம் போர்த்னள் பார்மகள் யானும் பசலையென்னுந்
துணிப்படம் போர்த்திங்குத் தேனங்குத் தாரன்பர் துங்கக்கைம்மா
முனிப்படம் போர்த்த பிரான்சிராப் பள்ளியு மூரிக்கொண்மூத்
தனிப்படம் போர்க்கும் பரவமன் றோவந்து சந்தித்ததே
32
வந்துசந் தித்திலர் காதலர் பேதையை வாதைசெய்வா
னந்திசந் திப்பவெழுந்த தரன்றன் சிராமலைவாய்க்
கொந்துசந் தித்தசெங் காந்தண் முகைகொண்டு கொண்டிடுவான்
மந்திசந் திப்பவர் வென்றுள வாடு மதிப்பகையே
33
மதியும் பகைமுன்னை வாயும் பகைமனை யும்மனைசூழ்
பதியும் பகைபகை யன்றில்என் றும்பகை பான்மைதந்த
விதியும் பகையெனி லும்மன்ப தன்பினர் வெள்ளக்கங்கை
பொதஒயுஞ் சடையன் சிராமலை போலுமெம் பூங்குழற்கே
34

குழனெறி காட்டிய கொம்பனை யாரொடுங் கொண்டசுற்ற
மழனெறி காட்டு மிடத்தெனக் குத்தனக் கன்பர்சென்ற
பழநெறி காட்டும் பரன்சிராப் பள்ளி பரவக்கற்றேன்
முழுநெறி யாகிலுஞ் செல்லே னினிச்செல்வர் முன்கடைக்கே
35
இனிச்செல்வர் முன்கடைக் கென்செயக் சேறு மினையனெஞ்சேய்
கனிச்செல்வ மாம்பொழிற் காவிரித் தென்கரைப் பூவிரிக்கும்
முனிச்செல்வர் சேருஞ் சிராப்பள்ளி மேய முக்கட்சுடரை
தனிச்செல் வனைப்பணிந் துள்ளமிர் தூரித் தடித்தனமே
36
தடித்தசுற தங்கமழ் சாரற் சிராமலைச் சங்கரன்தன்
கொடிக்கண்ட வள்ளேறென்ன வெற்றிணைக் கரங்கொடி ழைத்தரண்சூழ்
படிக்கண்விட் டார்த்தன ராயர் தளைப் பருவலியாற்
பிடித்தமொய்ம் பர்க்கின் றெளியளன் றோளங்கள் பெண்ணமிர்தே
37
பெண்ணமிர் தைப்பார் பெருந்தே னமிர்தைப் பிறைநுதலை
வண்ணப் பயலை தணிவித் திரேல்வம்மின் செம்மனத்துக்
கண்ணப் பனுக்கருள் செய்த சிராமலை யானைக்கண்டு
விண்ணப் பமுஞ்செய்து வேட்கையுங் கூறுமின் வேறிடத்தே
38
வேறுகண் டாய்நெஞ் சமேதள ரேல்விளை மாங்கனியின்
சேறுகண் டாருண் சிராமலை யாதிதன் செல்வஞ்சென்னால்
யாறுகண் டாயவன் றேவியல் லம்பல மேற்பதைய்ய
மேறுகண் டாயவ னேறிப் பல் காலம் இயங்குவதே
39
காலால் வலஞ்செய்து கையால் தொழுதுகண் ணாரக்கண்டு
மேலா னவருடன் வீற்றிருப் பாலெண்ணில் மெய்ப்பலவீர்
சேலார் கழனிச் சிராமலை மேயசெம் பொற்சுடரைப்
பாலா னறுநெய்யோ டாடியைப் பாடிப் பணிமின்களே
40
பணிமின்கள் பாதம் பகர்மின்க ணாமங்கள் பாரகத்தீர்
தணிமின்கள் சீற்றம் தவிர்மின்கள் மொய்ம்மை தவம்புகுநாள்
கணிமின்க ளேனற் கிளிகடி மாதர்தங் கைவிசைத்த
மணிமின்கள் போலொளிர் வான்றோய் சிராப்பள்ளி வள்ளலுக்கே
41
வள்ளலுக் கும்மலை மாதர்தங் கோனுக்கு வாட்சடைமேல்
வெள்ளெருக் கும்மதி யும்பொதிந் தானுக்கு வெண்பளிங்கு
தெள்ளலைக் கும்மரு விச்சிராப் பள்ளிச் சிவனுக்கன்பா
யுள்ளலுக்கு நன்று நோற்றதன் றோவென் றுணர்நெஞ்சமே

42

நெஞ்சம் துணையுண்டு நீர்நிலத் துண்டு நிழலுமுண்டு
தஞ்சப் பெருக்குள தானஞ் சிராமலைச் சாரலுண்டு
துஞ்சுந் துணையுஞ் சிவனைத் தொழுது துறக்கமெய்தார்
பஞ்சந் நலியப் பலிதிரி வார்சிலர் பாவியரே

43

பாவிய ராக புரத்திற்பட் டார்பசுஞ் சந்தனத்தி
னாவிய ராவு சிராமலை யா¨னையு நல்லனென்னோ
மோவிய ராலு மெழுதப் படாஉரு வத்தசுரர்
தேவிய ராயுங் கொண்டதன் றோவவன் செஞ்சுரமே

44

சரங்கலந் தோரைப் புணர்விக்க வேயார்வமென் றார்க்கணவன்
னிரங்கலந் தோடெரி சேர்கின்ற வாறென் சிராமலையா
யிரங்கலந் தோவிலை யால்வினை யேற்கென் றிரதிமண்மேற்
கரங்கலந் தோலிடக் கண்டதன் றோநின்றன் கண்மலரே

45

கண்மலர் நீலங் கனிவாய் பவழங் கருங்குழல்கார்
எண்மலர் மூக்கிளங் கொங்கைகள் கோங்கிடை யென்வடிவென்
உண்மல ராசையி னொப்புடைத் தல்கிலொண் பொன்மலையான்
றண்மலர் சேர்தனிச் சங்கிடு வாளரு பெண்கொடிக்கேய்

46

பெண்கொடி யாரிற் பிறர்கொடி யாரில்லை பேரிடவத்
திண்கொடி யாரைச் சிராமலை யாரைத் திருநுதன்மேற்
கண்கொடி யாரைக் கனவினிற் கண்டு கலைகொடுத்த
வொண்கொடி யாரை வுணர்வழிந் தாரென் றுரைப்பார்களேய்

47

கள்ளும் முருகுந் தருமல ரான்மிக்க சந்திறைஞ்சி
யுள்ளும் புறமும் மொருக்கவல் லார்கட் குலகறியக்
கொள்ளும் மடிமை கொடுக்குந் துறக்கம் பிறப்பறுக்குந்
தெள்ளும் மருவிச் சிராமலை மேய சிவக்கொழுந்தே

48

கொழுந்தார் துழாய்முடிக் கொற்ற கருடக் கொடித்தேவுஞ்
செழுந்தா மரையிற் றிசைமுகத் தாதியுஞ் சேவடிக்கீழ்த்
தொழுந்தா ரியர்தந் துணிவைப் பணியச் சுடர்பிழம்பா
யெழுந்தான் சிராமலைக் கேறநம் பாவம் மிழிந்தனவே

49

இழியுந் நரகமு மேறுந் துறக்கமு மிவ்விரண்டும்
பழியும் புகழும் தரவந் தனவினைப் பற்றறுத்துக்
கழியும் முடம்பும் கழித்தவர் காணுங் கழலன்கண்டீர்

பொழியுங் கருமுகில் போர்க்குந் திருமலைப் புண்ணியனேய்

50

புண்ணியன் வேதம் முதல்வன் புரமூன் றெரித்தவன்று
திண்ணியன் றேவர் பிரானென்ன நின்றான் சிராமலைவாய்க்
கண்ணியன் றண்ணந் தழையன் கனைபொற் கழலம்பாற்
றண்ணியன் இன்றும் வரும்மன்று போன தனிவில்லியே

51

வில்லிபின் செல்லமுன் செல்லா அரிவையு மென்கிளிப்போல்
சொல்லிபின் சொல்லமுன் செல்லா விடைலையுட் சொல்லிம்மான்
வல்லிபின் செல்லமுன் செல்லா திடங்கொண்ட மாதவர்போ
லெல்லிபின் செல்லமுன் செல்லார் சிராப்பள்ளி யெய்துவரேய்

52

எய்துவ ராயமுந் தாமும் இரும்பொழி லென்னைமையல்
செய்தவர் வாழ்வுஞ் சிராமலை யென்பது சென்றுகண்டால்
மெய்தவர் மான்விழி மென்முலை தண்ணிய வம்முலைக்கீ
ழைய்தவர் நுண்ணிடை யல்கிலுஞ் சால வளவுடைத்தேய்

53

உடைத்தேய் வருதுன்ப வெம்பகை நீக்கி உலகளிக்குஞ்
சடைத்தே வர்முடித் தேவருந் தாடொழத் தானவரைப்
படைத்தேய் கெடுத்த பரமன் சிராமலைப் பாடிருந்துங்
கடைத்தே வனைத்தொழு மோவினை யேயென் கரதலமேய்

54

கரம்பற் றியவில்லி கைபற் றியவில்லி காலலைக்குஞ்
சுரம்பற் றியசெழு மம்பொன் சுடர்கம லயத்தயன்றன்
சிரம்பற் றியமழு வாளிதன் சாரற் சிராமலைசேர்
வரம்பற் றியபெரி யோரிற்சென் றேகினி வாழ்பதியே

55

பதியிலந் நாடிலம் பைம்பொற் குடைபெறப் பண்டுசெய்த
விதியிலம் . . . . இலம்வியன் கங்கையென்னு
நதியிலங் குஞ்சடை நாதன் சிராமலை நண்ணவென்னும்
மதியிலம் வாழ்வா னிருந்துமென் னோநம் மனக்கருத்தேய்

56

மனக்கருத் தாகிய . ரவலை கண்சே . பற்றின
. . க் கருத்து . . இருந்தென் . . . . . .
. . . . கெலாம் . . . .
. . . கொட்டிற் றளைக்கு . . . சிராமலையே

57

மலையாள் மடந்தையோர் பாகத்தன் மாகத் துமானதஞ்
சிலையா லழிவித்த நாதன் சிராமலை தேவர் . வ

முலையா யருவர் . . . குயிர்க்க . . . .
மிலையா . ழிருணர்ந் தெமைவி னாவி யியங்குவரேய்
58
இயங்கிய காலு நிலனும் எரியு மிருவிசும்பும்
மயங்கிய நீரும் மறையும் பிறவு மருவியரந்
தயங்கிய சோதியுந் தானாந் திருமலைத் தத்துவன்றாள்
முயங்கிய சிந்தை யினார்களெந் நாளு முடிவிலரே
59
முடியரை சாளுமுந் நீரகல் ஞாலந்தன் முன்னணிந்த
வடியரை யாள்விடு வான்சிரா மலை ஐயநிலயிற்
பிடியரை சாளி பிடிப்ப நடுக்குறும் பெய்புனத்தேய்
குடியரை சாளுங் குறவருஞ் சாலக் கொடுமையரே
60
கொடும்பற் றுயங்கிக் குழிகண் ணிடுங்கிக் குரனடுங்கி
இடும்பைக் கொதுங்கி யிறுமற் பகைகொல்ல இல்லிபட்ட
நெடும்பற் களைய நிலையா உடலை நிலையுமென்னார்
திடும்பற் கலுழிச் சிராமலை யாளியைச் சேர்ந்தனரேய்
61
ஆளியைச் சேர்ந்த வகலத் தவனுக் கிளையவம்மென்
றோளியைச் சேர்ந்த பிரான்றன் சிராமலை துன்னலர்போல்
மீளியைச் சேர்நாதனம் செய்தளை யெய்வினை யேன்பயந்த
வாளியைச் சேர்ந்த சிலைபோல் லுருவத்து வாணுதலே
62
நுதன்மிசைச் செங்கண் மலர்ந்தனங் கோடையின் மன்மதவேள்
மதனுகப் போந்தழற் சிந்துவித் தான்வண் சிராமலைவெற்
பிதன்மிசை சாரலில் யாமா டிடமிள வண்டுறங்கும்
புதன்மிசைத் தோன்றியும் காந்தளும் பூக்கும் பொழிலிடமே
63
பொழிலுடை யார்பணி பொன்னடி வானவர் முன்முடிசேர்
கழலுடை யானது காமர் சிராமலைக் காரனைய
குழலுடை யாணசைய ராற்குறவர் கொல்லியானைக் கொள்ளித்
தழலுடை யாநெறி யம்பொறி போர்க்குந் தயங்கிருளே
64
இருளின் படலம் மிவைகார் முகிலில் லைவெண்ணின்
மருளு மயர்வும் பெரிதுடை யாரில் லைவல்லி .
. ருணோய் தெரும் மனத்தார்க் கருளும் பிரான்றன் சிராமலைபோல்
பொருளும் மவிரும் பொன்னகர் வீதி புகுந்தாரேய்
65
வீதிவந் தாருடன் வெள்களந் தான்னிள ராலிவடன்

சோதிசேர்ந் தான்சிந் தை . ரல்லி . வுண்ணா . ரதருவின்
. . சிந்தா மந்தியா டுஞ்சிரா மலைப்போ
லாதிசெந் தாமரை வண்ணங்கண் டானங் கள்இழையே
66
இழையிடங் கொண்ட தடமுரண் . . திளங் கோமதலை
விழைவிடங் கொண்ட வெண் . ரனாறி . ர்தன்றி . ன்னி . ழவி
மழையிடங் கொண்ட சிராமலை யாரளி மிறந்தவர்போல்
பிழையிடங் கண்டது . . . . . ன் பெண்கொடிக்கே
67
கொடிகட் டியமணி மாளிகைத் தில்லையுட் கொற்ற மன்னர்
முடிகட்டி யமுகைசேர்கழல் மூவாயிரவர் முன்னின்
றடிகட் டியகழ லார்க்கநின் றம்பலத் தாடுமைய்யர்
வடிகட் டியபொழில் வான்றோய் சிராமலை மாணிக்கமே
68
வான்தோய் சிராமலை வந்திறைஞ் சாதவர் மையல்வைகுந்
தேன்றோய் மொழியவர் செவ்வாய் நினைந்துவெள் வாய்புலர்ந்து
மீன்றோய் கடலன்ன வேட்கைய ராகத்தம் மெய்ம்மைகுன்றி
ஊன்றோய் உடகிங் கொழித்துயிர் போக்கும் உறைப்பினரே
69
உறைப்புடைக் கூற்றை யுதைத்துயிர் மாற்றி யுலகறிய
மறைப்புடை மார்கண் டயற்கருள் செய்தவன் வானெரிவாய்க்
கறைப்புடைப் பாம்புறை திங்கட் கரைக்கங்கை நீரலைக்குஞ்
சிறப்புடைச் செஞ்சடை யான்உறை கோயில் சிராப்பள்ளியே
70
பள்ளியம் மாதுயி லெற்கின் றிலை பாவிப் பிழைத்தாய்
வள்ளிதம் . . சிலைவேடன் உட்கா . . . .
வெள்ளியம் மாமலை யாளன் சிராமலை மேல்மலையன்
உள்ளியம் மாவிரந் தாலுகந் தியபத முன்மத்தமே
71
மத்தமைத் தான்சென்னிப் பொன்னிம வான்பெற் றமாதுதன்
. . . . முழுதும்
பித்தமைத் தாய்சிந்தை நொந்து குலமந்து பேரமர்க்கண்
முத்தமைத் தாய்கங்கை . ¡கில் . நின் முதிர்ச்சியையே
72
முதிரும் பரவை முகந்தகொண் மூமுக டேறிமுன்னி
யதிரும் மா . . . ப்பது . . . . . வ்வமுங்
கதிருன் மலந்த சிராமலை யாளி கழனோம்பு
கதிர்த்திரு வருள்போ லினியா னையின் றெய்துவனே
73

யானையின் றெய்த பிடியா மட . . . . . .
. . யன் பர்தம் வாழ்நா ளை . . றென்றுவிட் டார்சிந்தை
. . னெறுங் கொன்ற வீரன் சிராமலை யேவினப்பாற்
பூனை நின்றெங்கும் பொரியதிர் தினம்பு குந்தனரே
74
தினம்புகு கின்றது தண்பணை யாகத் தன் . . மா
வினம்புகு தேர்நின் றிழிந்துபுக் காரன் பரென்று . வுஞ்
சினம்புகு திண்விடைப் பாகன் சிராமலைத் தெய்வமன்னான்
மனம்புகு வெம்பணிக் கோ . . ணந்திட் டமாமருந்தேய்
75
மருந்தேய் சிராமலை மாமணி யேமரு தாடமர்ந்தாய்
கருந்தெய் நறும்பொழிற் கற்குடி மேய கொழுஞ்சுடரேய்
முருந்தேய் முறுவ லுமைகண வாமுதல் வாவெனநின்
றிருந்தேய் நிறையழிந் தேன்வினை யேன்பட்ட வேழைமையே
76
ஏழைப் புதல்வ னெனக்குத் துணையுமக் கெங்கையுங்
கோழைக் குரற்பெரும் பாணனை யுங்கொளக் குன்றர்கொன்ற
வாழைக் குலைமண நாறுஞ் சிராமலை வாழ்த்தலர்போல்
மோழைப் பெரும்பேய் சொல்லேலு நில்லெனுமென் முன்கடையே
77
கடையகத் துச்சென்று கானிமித்து நின்று கைவிரித்து
நடையகத் துப்பெரி தென்னத் திரிவர் நகுமதிசேர்
சடையகத் துக்கங்கை வைத்தான் சிராமலை சார்வொழிந்து
படையகத் துச்செல் வராய்நல் லாரான . . . . ரே
78
களகன் னிவனெனப் பாரோர் நகப்பனை யின்மடன்மே
லகளந் நுதலி பொருவந் நாட லியானைக்கன்று
மிளகு மடமையின் முளையும் மிளகமென் றேன்பருகி
குளகுந் நுகருஞ் சிராமலை சூழ்ந்த குலப்பதிக்கேய்
79
பதியற் றிடராற் படுதலை யிற்பலி கொள்வதெங்குங்
கதியற்றி ஊர்வது காசின மால்விடை காதலியுந்
நதியற்றி யூர்நகர் நஞ்சுண் பனதந் தலை . . ஞ்ச
மதியற்றி யூருஞ் சிராமலை மாதவர் வாழ்வகையே
80
மாதவர் வாழுஞ் சிராமலை மாமணி கண்டாங்கேய்
போதுவ ராகிலும் போமடவா யென்ன நிலநடுவே
யீதவர் விதியன் றென்பர் போலிருந் தோங்குணத்தோய்
. . யா விசொல் லாயவர் பாற்சென்று சொல்லுதற்கேய்

81
சொல்லும் பொருளும் சுவையும் பயனு மிலவெனினும்
அல்லும் பகலும் மிகதா மெனக்குப் புரமெரிப்பான்
வில்லுங் கணையுந் தெரிந்த பிரான்தன் சிராமலைமே
லெல்லுங் கனைகழ லின்குணம் பாரித்த வென்கவியே
82
கவியலைத் துண்ணுங் கலைஞர்தங் காமரறு கார்களிற்றின்
செவியலைத் துண்ணுஞ் சிராமலை வாழ்நனைச் சேரகில்லார்
புவியலைத் துண்ணும் போர்வண் . . . . . வலராய்
நவியலைத் துண்ணுமங் காடுநங்கை . ராடு நண்ணுவரே
83
நண்ணு தலர்கா நற்படு மலரு நறுங்குடுமி
விண்ணுதல் போழுஞ் சிராமலை வெற்பனை வேறிருந்து
மண்ணுதல ரடிப்பணிந்த னாம மதை. . டக்காயன்
. . . வல்லார்க் கெளிதிமை யோர்த மிரும்பொழிலே
84
இரும்பிடைச் சேர்ந்ததெண் நீர்வளண்மை பெற்றிமை யோரிருக்கப்
பொரும்படைக் கூரெய்த பொன்மலை யாயை புணர்ந்தபின்னைக்
கரும்பா . . . . . . மிர்துங் கனிவளனுஞ்
சுரும்பிடைத் தேனுநன் பாலுநின் போலச் சுவையில்லையே
85
இல்லையென் பார்பொரு ளுண்டெனப் பரிவ விரதிபழஞ்
சொல்லுந் தளையா லவர்இரணங் கள்மூன்றின் சுடர்விளக்காத்
தில்லையென் பர்தென் சிராமலை யாயென்று சென்றிறைஞ்சி
வல்லையன் பர்க (நெஞ்சே) யடு . . னியின வன்பழிக்கே
86
பழிக்கும் இருட்படலம் பேரரு ளன்கையு மஞ்செழுதயு
விழிக்கும் இளமையவ ரேறும் மிடத்தெதிர் வந்தருவி
தெழிக்குஞ் சிராமலைச் சித்தரைத் தீர்த்த . . யங்
கழிக்கும் மிதுமெய்ம்மை கைகொண்ட யோகங் கடலிடத்தே
87
இடங்கொண்ட வேலையு மேழுமலை யும்திசை யானையெட்டும்
படங்கொண்ட நாகஞ் சுமந்தவிப் பாருமே படருங்கொலோ
திடங்கொண்ட சாரணற் சிராமலைக் கூத்தன்செம் பொற்கழல்சேர்
நடங்கொண்ட சேவடி குஞ்சித் தருள்செய்த நானகத்தே
88
அருள்செய் வதும்படை யென்மெய்ம்மை யேயடி யேனுக்கின்மை
பொருள்செய் துதவும் புதல்வரைத் தந்தென்பொல் லாதசொல்லால்
மருள்செய்த மாலைகொண் டானைவண் டாருஞ் சிராமலைவா

யிருள்செய்த கண்டனை யேதொண்டர் காள்வந் திறைஞ்சுமினே
89
வந்திறைஞ் சித்தளர்ந் தேன்செல்லு மோசிந்தை மாதவர்மேற்
சந்திறைஞ் சிப்படர் சாறற் சிராமலைத் தாழ்பொழில்வாய்
கொந்திறைஞ் சிக்கமழ் கோதைக் குலாவி குழலவிழப்
பந்திறைஞ் சிப்பிடி பாளிடைக் கேசென்று பற்றுண்டதே
90
தேறுசொல் லாததமிழ்த் தென்வேம் பயரண்ணற் செங்குவளை
நாறுமல் லாகத்து நாராயணன் பண்டை நான்மறையும்
ஏறுமல் லோனைச் சிராமலை யாளியை யிங்கு . . த்த
னீறுமல் லோர்தம்மை நோக்கவல் லார்க்கென்று நோயில்லையே
91
நோயிலங் காதலு டையநெஞ் சேய்நுரை வெண்கடலுட்
போயிலங் காபுரமஞ் செற்றபொற் றேரவன் போந்திருந்து
வியிலங் கார்தரு மந்திரத் தால்வணங் கிப்பணிந்த
சேயிலங் கார்கழற் றீர்த்தன் சிராமலை சென்றடைந்தே
92
அடைக்குங் கதிர்மணி யாரல் முலைக்கணிந் தல்கின்மெல்லம்
புடைக்குங் கலைபுனைந் தோதியிற் போது பொதிந்துவிட்டார்
விடைக்கும் முமைக்கு நற்பாகன் சிராமலை மெல்லியலீ
ரிடைக்கும் இளையவர்க் கும்பகை யோநும்மை யீன்றவரே
93
ஈன்றாள் வருந்தவிம் மைப்பிறந் தம்மைக் கிரங்கினைய்யு
மூன்றா முடிகொண் டொப்போ மெளிப்பட் டொரிங்கிநின்றோந்
தேன்றாழ் சிராமலை வாரியின் மூரித்தெய் வக்களிறேய்
தோன்றா யெமக்கொரு நாள்வினைப் பாசத் துடரறவே
94
துடரிடை யாத்த ஞமலியைப் போலிருந் தேனிச்சுற்றத்
திடரிடை யாப்பவிழ்ந் தென்னைப் பணிகொள்பொன் னைப்புரைஞ்
சுடரிடை யாத்த பைங் கொன்றையு மத்தமுஞ் சூழ்சடையின்
படரிடை யாத்த பரமன் சிராமலைப் பால்வண்ணனே
95
பால்வண்ண நீற்றெம் பரன்சிராப் பள்ளிப் பரஞ்சுடர்தன்
பால்வண்ணங் கண்டுநம் பல்வண்ண நீங்கிப்பக் கத்திடஞ்சேர்
மால்வண்ணங் கண்டுதம் மால்வண்ணங் கொண்ட வளைச்சரிந்து
மால்வண்ணங் கொண்டுவந் தார்சென்று காண்மின்கள் மங்கையிரே
96
மங்கையம் பார்கண்ணி பெண்ணுக் கரைசி மலைமடந்தை
கொங்கையம் பாரங்கள் போல்வா னெழுந்து குவிந்தழிந்து

பங்கயம் பாதங்கள் பொன்மலர் பெறாதவர்ப் பொன்மலைமேற்
புங்கவன் பாதந் தொழுதொழிப் போமெங்கள் பொய்யுடம்பே
97
பொய்யினைப் பேசிப் பொருளினைத் தேடிப் புழுப்பொதிந்த
மெய்யினைக் காத்து வெறுத்தொழிந் தேன்வியன் பொன்மலைமே
லையனைத் தேவர்தங் கோனையெம் மானையெம் மான்மறிசேர்
கையனைக் காலனைக் காய்ந்த பிரானைக் கழல்பணிந்தே
98
கழலும் மருளுநஞ் சென்னிவைத் தோன்கன கச்சிலம்பிற்
கழலும் மலரும் மசோகும் பலாசுந்துட ராதெழந்திட்
டழலின் புறுத்து வெண்ணீறொத் தணநம் மணிவளையார்
குழலும் அளகமும் பெய்யக் கொய்யாத குராமலரே
99
குராமலைகொண்ட உலகொளிம் மதியமுங் கோளரவும்
இராமலை வான்பகை யென்பது பொய்மெய்ம்மை யோர்க்கருளுஞ்
சிராமலை வானவன் சென்னியின் மேற்கொண்ட சீர்மையினாற்
கராமலை நீர்க்கங்கை பாலுடன் வாழ்கின்ற கண்டனரே
100
கண்டன கேட்டன வுற்றன காம ரறுசுவையா
லுண்டன மோந்தன வைம்பொறி யுள்ளு முயிர்தழைப்பக்
கண்டன கேட்டன வுற்றன காம ரறுசுவையா
லுண்டன மோந்தன பொன்மலை யாளர்க் கோக்கினவே
101
ஒக்கிய கையோ டொருக்கிய யுள்ளத்தி யோகியர்தம்
வாக்குயர் மந்திரம் வானரங் கற்றுமந் திக்குரைக்குந்
தேக்குயர் சாரற் சிராமலைக் கூத்தன்செம் பொற்கழல்மே
லாக்கிய சிந்தை யடியார்க்கென் னோவின் றரியனவே
102
அரியன சால வெளியகண் டீரரு வித்திரள்கள்
பரியன நேர்மணி சிந்துஞ் சிராமலைப் பால்வண்ணனைக்
கரியன செய்யன நுண்சுடர்ப் பைங்கட் கடாக்களிற்றி
னுரியனை நாழிகை யேத்தவல் லார்க்கிவ் வுலகத்துளேமுற்றிற்று
103
மற்பந்த மார்வன் மணியன் மகன் மதிள் வேம்பையர்கோ
னற்பந்த மார்தமிழ் நாரா யணனஞ் சிராமலைமேற்
கற்பந்த நீழலில் வைத்த கலித்துறை நூறுங் கற்பார்
பொற்பந்த னீழ லரன்திருப் பாதம் பொருந்துவரே
(பயன் கூறும் பாயிரம்)
வெண்பா (மேற்படி நூல் முடிவில் காண்பது)

104
மாடமதிரை மணலூர் மதிள் வேம்பை
யோடமர் சேஞலூர் குண்டூர் இந்-நீடிய
நற்ப்பதிக்கோ னாரா யணனஞ் சிராமலைமேற்
கற்பதித்தான் சொன்ன கவி

* கல்வெட்டுகளிலும் செப்பேடுகளிலும் "மதுரை" என இந்நாளில் வழங்கப்படுவது "மதிரை" எனத்தான் காண்கின்றது அதாவது ஓலைச்சுவடிகள் 200 ஆண்டுகளுக்குமேல் சீர்மையாக இருக்க முடியாதாகையால் தலை முறை தலைமுறையாக தமிழின்பால் பற்றுடையோரும் தனக்கே புலமைதனைத் (கற்பிக்கும்) தொழிலாகக் கொண்டோரும் காப்பாற்றிவந்த ஓலைச் சுவடிகள் அதனை நகல் எழுது நிலையில் மாறுதலைடையும் போதெல்லாம் புதிதாக ஒன்றினை தன மனம் போன வழியில் சேர்த்துவிடுவர். அவ்வழி வடநாட்டு மதுரா சிறப்புப் பெற்றதாகையால் அதனை ஒட்டி தமிழ் நாட்டு நகரமும் இருக்கவேண்டும் எனும் கொள்கையில் மிக நன்றாகத் திட்டமிட்டு எங்கெல்லாம் மதிரை எனும் சொல் உள்ளனவோ அவற்றை மிக்கது தெரிந்தே அடுத்த முறை மாற்றி எழுது ம் நிலையில் மதுரை என மாற்றம் செய்து வந்துள்ளனர் எனத் தெரிகின்றது.

எங்ஙனம் ??
கல்வெட்டிலோ செப்புப் பட்டயத்திலோ ஒருமுறை பொளித்தால் மாற்ற முடியாது ஆகையால் பழம் கல்வெட்டுகளிலும் பழைய செப்புப்பட்டயங்களிலும் மட்டுமே மதிரை தன் பழைய பெயரை நிலைநிறுத்திக்கொண்டுள்ளது கொண்டு உண்மையை உணர முடிகின்றது மேலே இங்குக் கண்ட கல்வெட்டிலும் மதிரை எனத்தான் உள்ளது கண்டீர்.

ப. பாண்டியராஜா:
ஐயா! தாங்களே குறிப்பிட்டபடி, " ..... கல்வெட்டுகளுக்கே இயல்பான எழுத்துப் பொறி வினைஞரால் வரும் சொற் பிழைகளுடன் படியின் ... " என்ற கூற்றுப்படி மதுரை என்பது பிழையாக மதிரை என்று பொளிஞரால் எழுதப்பட்டிருக்கலாம் அல்லவா! வேம்பற்றூர் என்ற ஊரில் பெயரே பிராமிக் கல்வெட்டில் **வேம்பிற்றூர்** என்றுதான் குறிக்கப்பட்டுள்ளதைத் தாங்கள் அறிவீர்கள். (மதுரை விக்கிரமங்கலம் அருகே பெரிய உண்டாங்கல்லு கல்வெட்டு)

நூ.த.லோக சுந்தரம்:
சோழர்கள் செப்பேடுகள் பத்தொன்பது எனும் (நடன காசிநாதன்)நூலில் இருந்து இரண்டு எடுத்துக்காட்டு படம் எடுத்து வைத்துள்ளேன் காண்க.

(1)

இது முதலாம் பராந்தகன் காலத்து உதயேந்திரம் செப்பேடு ஏ டு 5 பக்கம் உ


சோழர் செப்பேடுகள் பத்தொன்பது
செப்பேடு எண். 1
முதலாம் பராந்தகச் சோழர் உதயேந்திரம் செப்பேடு
(தமிழ்ப்பகுதி)
ஏடு - 5, பக்கம் - 2
(71) மதிரை கொண்ட கோப்பரகேசரிவர்மர்க்கு யாண்டு
ஏடு - 6, பக்கம் - 1
(72) பதினைந்தாவதற்கு செம்பியன் மாவலிவாணாராயர் விண்ணப்பத்தா–
(73) ற் பெருமானடிகள் தம் பேராற் செய்த ப்ரமதேசம் படுவூர்க் கோட்டத்து மேவலை –

(2)
"திருத்தணியில்" அருகு வேலஞ்சேரியில் கிட்டிய இதுவும் முதலாம் பராந்தகனின் காலத்து செப்பேட்டுப் பக்கம்1 ஏடு 4 ஆகும். இங்கு ஊர்களின் பெயர்கள் கீழ்க்கோடிட்டு காட்டியுள்ளேன். இதனில் வரும் மதிரை பாண்டிய நாட்டு மதிரை அல்ல ஆனால் ஊர்ப்பெயர் எப்படி வழங்கியது என்பதற்கு ஓர் எடுத்துக்காட்டு ஆகும்.


க வென்று திருமுகம் வர நாட்டோமுந் திருமுகந் தொழுது தலை மேற்
கல்லுங் கள்ளியு நாட்டி அறையோலை செய்து படாகை நடந்த நிலத்துக்
எல்லை கீழ்பாலெல்லை பூண்டியும் நென்மலியும் அருங்களமும்
இம்மூன்றூரெல்லைக்கு மேற்குந் தென்பாலெல்லை மேலிருஞ்
செற்று எல்லைக்கு வடக்கும், மேல்பாலெல்லை பாற்பாக்கமும்
நெடுங்குன்றமும் முடிப்பலியும் மதிரையும் இந்நாலூரெல்லை
க்குங் கிழக்கும், வடபாலெல்லை உழையூரும் நல்லாற்றூரும் இவ்விர
எல்லைக்குத் தெற்கும், இவ்விசைத்த பெரு நான்கெல்லை யுள்ளும் அ
ட்ட நீரும் நிலமும் புன்செய்யும் ஊரிருக்கையும் மன்றுங் கன்றுமே
- 4, பக்கம் 2
ய் பாழும் கிடங்கும் கேணியுங் காடு காலும் புற்றுந் தெற்றியும் ஆக நீ
ர்பூசி நெடும் பரம்பெறிந்து உடும்போடி ஆமை தவழ்ந்த தெப்பேர்பட்ட
ம் மேலிருஞ் செற்று

நூ த லோ சு (நூ.த.லோக சுந்தரம்)
மயிலை
selvindls61@gmail.com

4. மானாமதுரை கல்வெட்டு

முனைவர் கி. காளைராசன்

மானாமதுரை வைகை ஆற்றின் வடகரையில் (**புவியிடக் குறிப்பு:9.6931N, 78.4552E**) கிடக்கும் கல்வெட்டு. இரண்டு பக்கங்களில் எழுத்துகள் உள்ளன. ஆற்றில் கிடந்த கல்லை எடுத்து வைத்துள்ளார்கள்.



கல்வெட்டுப் பாடம் வழங்கியவர் -
து.சுந்தரம், கல்வெட்டு ஆராய்ச்சியாளர், கோவை.

திரு.காளைராசன் அவர்கள், முதலாம் இராசராசனின் கல்வெட்டு ஒன்றை இனங்கண்டு வெளிப்படுத்தியுள்ளார். நன்றி.

கல்வெட்டுப் பாடம் - முதல் படம்

1 ஸ்வஸ்திஶ்ரீ ... ரு ... ச
2 ..த்து வேங்
3 டியுந் தடிகை..
4 செந்த ....
5 முடையார்.......
6 யம்மை
7 .. ஒன்றுக்கு
8 (வா)ழு (பா) செ
9 டு 25 இருபத்..
10 கொண்டு
11 நெய் அட்டு..
12 (இ)ரு (காசு)


12-Mar-2017 6:24:39 AM
9.69315796N 78.45526164E
Altitude:-13.0m
Speed:0.0km/h
Kasi Shri Dr. Na.Ra.Kr. Kalairajan

கல்வெட்டுப் பாடம் - இரண்டாம் படம்

1 ஸ்வஸ்தி
2 ஸ்ரீ (கோ)
3 ன உடையார் ஸ்ரீ
4 கு யாண்டு 5 ஆ
5 ண்டலத்து கா
6 (பா) ..தானந்திச்ச
7 (த்த) ஸுப்ரஹ்மண்ய
8
9 புலியனைச் சாத்(தி)
10 னாராயணனான
11 (செ)ங்குடி நாட்டு
12 தி ச நுந்தாவிள(க்)

குறிப்பு:

கல்வெட்டு, முதலாம் இராசராசன் காலத்தது என்பதற்குக் கல்வெட்டில் அகச்சான்றாக, இராசராசனின் மெய்க்கீர்த்தியில் வருகின்ற வேங்கை நாடு, தடிகை நாடு ஆகிய தொடர்களின் துண்டுப்பகுதிகள் உள்ளன. கல்வெட்டு, (அருகில் இருக்கும்?) கோயிலுக்கு நுந்தா விளக்கு (நந்தா விளக்கு) எரிக்கக் கொடை அளிக்கப்பட்டதைக் கூறுகிறது. கொடையாளியின் பெயர் தெரியவில்லை. ஆனால், புலியன் என்பானின் நலனுக்காகக் கொடை அளிக்கப்பட்டுள்ளது. இது. "புலியனைச் சாத்தி" என்னும் கல்வெட்டுத் தொடரால் அறியப்படுகிறது. கொடை முதலைக் (CAPITAL) கொண்டு, நெய் அளந்து தரவேண்டும் என்னும் குறிப்பு உள்ளது.

நெய்யின் அளவு தெரியவில்லை. கொடை முதல், காசாக இருக்கலாம் எனத் தோன்றுகிறது. (பெரும்பாலும், ஒரு விளக்குக்குத் தொண்ணூறு ஆடுகள் கொடை தரப்படுவதைக் காண்கிறோம்.

சிவப்பு வண்ண எழுத்துகள், கிரந்த எழுத்துகள். மற்றவை தமிழ் எழுத்துகள். கிரந்த எழுத்தில் உள்ள "ஸுப்ரஹ்மண்யம்" என்னும் சொல், கொடைக்கான (காசுகளை)ப் பெற்றுக்கொண்ட - கோயில் காணியுடைய - சிவப்பிராமணன் பெயராகவும் இருக்கக் கூடும். உறுதியில்லை. "நாராயணனான" என்னும் ஒரு பெயர், கொடையாளியின் பெயராக இருக்கலாம் என்னும் ஐயத்தையும் ஏற்படுத்துகிறது. கல்வெட்டின் பெரும்பகுதி, எழுத்துகள் மறைந்துபோகுமளவு தேய்மானம் கொண்டுள்ளது.


12-Mar-2017 6:24:24 AM
9.6931551N 78.4552271E
Altitude:-10.0m
Speed:0.0km/h
Kasi Shri Dr. Na.Ra.Kr. Kalairajan

கல்வெட்டில் உள்ள யாண்டு 5 என்பது இராசராசனின் ஐந்தாம் ஆட்சியாண்டைக் குறிக்கும். ஆட்சிக்காலம் கி.பி. 985-1014 என்பதால் கல்வெட்டு பொறிக்கப்பட்ட ஆண்டு கி.பி. 990. ஆனால், இன்னொரு கல்வெட்டில் ஆட்சியாண்டு 25 என்று காணப்படுகிறது. (கி.பி. 1010) எனவே, இக்கோயிலுக்கு இராசராசனின் ஆட்சிக்காலத்திலேயே, இருபது ஆண்டுகள் இடைவெளியில் இருமுறை கொடை அளிக்கப்பட்டதும், இரண்டு கொடைச் செய்திகளும் ஒரே கற்றூணில் இடம் பெற்றிருப்பதும் சிறப்பானது.கல்வெட்டில் எழுத்துகளைப் பார்த்ததும், ஏதோ ஒரு சிறப்பு அந்தத்தூணில் இருப்பதை உணர்ந்து தனியே எடுத்துவைத்த அந்த உணர்வான மக்கள் பாராட்டுக்குரியவர்கள். ஏனெனில் உணர்வின்றி உதறியெறியும் சூழ்நிலையைப் பல இடங்களில் காண்கிறோம்.

முனைவர் கி.காளைராசன்
kalairajan26@gmail.com

5. தேன்கனிக்கோட்டை சோழர் கால சுவர்க்க கல்வெட்டு தரும் செய்தி

து.சுந்தரம்

தினகரன் நாளிதழ் (27.02.17) செய்தி

நன்றி தினகரன்:http://www.dinakaran.com/News_Detail.asp?Nid=283073

தேன்கனிக்கோட்டை அருகே சோழர் கால கல்வெட்டு கண்டுபிடிப்பு



தேன்கனிக்கோட்டை: வரலாற்று ஆய்வாளர்அறம் கிருஷ்ணன் தலைமையில் பிரியன், மஞ்சுநாத், கிருஷ்ணமூர்த்தி, சிவா, முனேஷ் ஆகியோர் கொண்ட குழுவினர் கள ஆய்வில் இந்த கல்வெட்டு மற்றும் நடுகல் தொகுப்பை கண்டறிந்துள்ளனர். இதுகுறித்து அறம் கிருஷ்ணன் கூறியதாவது: கிருஷ்ணகிரி மாவட்டம் தேன்கனிக்கோட்டை அருகே 15 கி.மீ. தொலைவில் உள்ளது சாலிவாரம் கிராமத்தில் 13ம் நூற்றாண்டு சேர்ந்த சோழர் காலத்து தமிழ் கல்வெட்டும், மிகவும் பிரம்மாண்டமாக வெறு எங்கும் காணமுடியாத அளவு மூன்று நடுகற்கல்களும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. கல்வெட்டில் உள்ள ஒன்பது வரியும் படிக்க முடியாத அளவு சேதமடைந்துள்ளது. முதல் மூன்று வரிகள் ஒய்சாளர்களின் மெய்கீர்த்தி போல் உள்ளது.

சோழர் காலத்தில் செதுக்கப்பட்ட ஒய்சாளர்கள் கல்வெட்டு என்பதை மட்டும் அறிய முடிகிறது. ராஜராஜன் காலத்தில் தான் தர்மபுரி, கிருஷ்ணகிரி மாவட்டங்களை உள்ளடக்கிய தகடூர் நாட்டிற்கு முடிகொண்ட சோழ மண்டலம் என்று பெயர் வைக்கப்பட்டுள்ளது. ராஜேந்திரசோழ வளநாடு சோழர்களிடம் குறு நிலமன்னர்களாக இருந்து ஒய்சாள அரசர்கள் இவ்விடத்தை ஆட்சி செய்யும்போது நில தானமாக கொடுத்திருக்கலாம். முதல் நடுகல் சிறபம் குறுநில அரசனாக இருக்க வாய்ப்பிருக்கிறது. ஐந்தடி அகலமும், பத்தடி உயரமும் கொண்டது. இருகால்களையும் மடித்து சம்மணமிட்டு அமர்ந்த நிலையில் வலதுகையில் வாளை கீழ்நோக்கி பிடித்தப்படி, வாளின் கூர்முனை மடித்த குதிகாலினை தொடும்படியிருக்கிறது.

இக்கற்சிலையின் வலதுபுரத்தில் ஒரு பெண்ணின் கற்சிற்பம் மிகவும் நேர்த்தியாக செதுக்கப்பட்டுள்ளது. இடையிலிருந்து குதிகால்வரை வரிவரியாக ஆடை அணிந்திருப்பது போல் துள்ளியமாக வடிக்கப்பட்டுள்ளது. அரசனின் மனைவியாக இருக்க வேண்டும். நடுவில் இருக்கும் கற்சிற்பத்தை சுற்றிலும் நிறைய சிற்பங்கள் உள்ளன. கீழ் பகுதியில் ஏழு பேர் வரிசையாக நின்று கொண்டு வாத்தியம் வாசிப்பது போலிருக்கிறது. இவர்களின் அருகிலேயே குதிரையுடன் ஒரு போர் வீரன் நிற்கிறான்.

இது சுவர்க்கம் வகையைச் சேர்ந்த நடுகற்களாகும், இறந்தவுடன் நேரடியாக சொர்க்கம் சென்றதாகவும், அங்கே தேவலோக பெண்கள் வரவேற்பது போலவும் சிற்பம் அமைக்கப்பட்டுள்ளது. சோழர்கள் காலத்திலிருந்து தான் இதுமாதிரியான நம்பிக்கை வளர ஆரம்பித்திருக்க வேண்டும். 2வது நடுகல் சிற்பத்தை மார்பிற்கு கீழ்பகுதி மட்டும் தான் பார்க்க முடிகிறது. மேல்பகுதி முழுவதும் மிக பெரிய பாறை கல்லால் மூடப்பட்டிருக்கிறது. சிறப்பு மிக்க சிற்பங்களும், கல்வெட்டுகளும் இருந்தும் எந்த பயனும் இல்லாமல் அனைத்தும் பாதுகாப்பின்றி ஒரு குப்பை மேடாக காட்சியளிக்கின்றது. வரலாற்றை பற்றிய விழிப்புணர்வு அனைவரிடத்திலும் வரவேண்டும். இவ்வாறு அறம் கிருஷ்ணன் தெரிவித்தார்.

***

கல்வெட்டுப் பாடம் வழங்கியவர் -
து.சுந்தரம், கல்வெட்டு ஆராய்ச்சியாளர், கோவை.

கல்வெட்டுப்பாடம்:

1 ஸ்வஸ்திஸ்ரீமது மஹாமண்டலேச்வரந் த்ரிபு
2 வந மல்ல தழைக்காடு கொங்கு நங்கி
3 லி கொயாற்றூர் உச்சங்கி பாநுங்கல் கொண்
4 ட புஜபல வீர கங்கப் பொய்சள தே(வர்)
5 ப்ருத்விராஜ்யம் பண்ணிச் செல்லா நி
6 (ன்ற) ரத்தாக்ஷி சம்மற்சரத்து முடிகொண்ட
7 (சோ)ழ மண்டலத்து ராஜேந்த்ர சோழ வளநாட்டுச் சி..
8 நாட்டுக் கட்டுக் காமுண்டர் பனையந் (கந்நர)

கல்வெட்டின் எழுத்து, தமிழ். சிவப்பு வண்ண எழுத்துகள் கிரந்த எழுத்துகள்.



குறிப்பு :

கல்வெட்டு, ஹொய்சள அரசர்கள் காலத்தது. காரணம், கல்வெட்டில், “பொய்சள தேவர் பிருதிவிராச்சியம் பண்ணி” என வருகிறது. முடிகொண்ட சோழ மண்டலம், முதலாம் இராசராசனின் ஆட்சிக்காலத்தில் ஏற்படுத்திய கருநாடகப்பகுதிகள் அடங்கிய நிலப்பகுதியாகும். அதன் உட்பிரிவுகளில் ஒன்றே இராசேந்திர சோழ வளநாடு. கல்வெட்டில், கட்டுக் காமுண்டர் பனையன் (கன்னர) என்பவர் குறிக்கப்பெறுகிறார். முதல் நான்கு வரிகள் போசளர் மெய்க்கீர்த்திவரிகள். தழைக்காடு போசளரின் தலைநகர். கொங்கு, நங்கிலி, கொயாற்றூர், உச்சங்கி, பானுங்கல் ஆகியன போசளரின் ஆட்சிக்குட்பட்ட பகுதிகள். வீரகங்க போசளதேவர் என்னும் அடைமொழிப்பெயர், விஷ்ணுவர்த்தனன் என்னும் பிட்டிதேவன் கல்வெட்டுகளிலும், இரண்டாம் வீர வல்லாளன் கல்வெட்டுகளிலும் காணப்படுகிறது. எனவே, கல்வெட்டு இவ்விருவர் காலங்களில் ஒன்றாக இருக்கலாம். விஷ்ணுவர்த்தனனின் ஆட்சிக்காலம் கி.பி. 1104-1141. இரண்டாம் வீரவல்லாளனின் ஆட்சிக்காலம் கி.பி. 1171-1219. கல்வெட்டில் தமிழ் சுழற்சியானடான ”இரத்தாக்ஷி” ஆண்டு குறிப்பிடப் பெறுகிறது. (சம்வத்சரம் என்னும் சொல் சம்மற்சரம் என்று எழுதப்பட்டுள்ளது.) இரத்தாக்ஷி ஆண்டு

விஷ்ணுவர்த்தனன் ஆட்சிக்காலத்தில் வருவதிலை. இரண்டாம் வீரவல்லாளனின் ஆட்சிக்காலத்தில் கி.பி. 1204-இல் இரத்தாக்ஷி ஆண்டு வருகிறது. எனவே, கல்வெட்டு, இரண்டாம் வீரவல்லாளனின் காலத்தது
எனக் கொள்ளலாம்.

து.சுந்தரம்
கல்வெட்டு ஆராய்ச்சியாளர் கோவை.
doraisundaram18@gmail.com
அலை பேசி : 9444939156

6. அரசகுலப் பெண்கள் போர்செய்யும் காட்சி கொண்ட நடுகல்

அறம் கிருஷ்ணன்

தேன்கனி கோட்டைக்கு அருகே சந்தனப்பள்ளியில் அரசகுலப் பெண்கள் போர்செய்யும் காட்சி கொண்ட நடுகல் தமிழகத்தில் முதல் முறையாகக் கண்டுபிடிப்பு.

கிருஷ்ணகிரி மாவட்டம் தேன்கனிகோட்டைக்கு அருகில் உள்ள சந்தனப்பள்ளி எனும் ஊரில் அரச குலத்தைச்சேர்ந்த பெண்கள் போர் செய்யும்காட்சி கொண்ட நடுகல் தமிழகத்தில் முதன் முறையாகக் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

தேன்கனிகோட்டையை சேர்ந்த திரு. சுகுமார் கொடுத்த தகவலின்பேரில் கிருஷ்ணகிரி மாவட்டத்தின் அறம் வரலாற்று ஆய்வு மையத்தைச் சேர்ந்த அறம்கிருஷ்ணன் தலைமையில் மஞ்சுநாத், பிரியன், சீனிவாஸ்இராசு, காமராஜ், சிவக்குமார், முருகேசபாண்டியன் ஆகியோர் ஒன்றிணைந்து செயல்பட்ட களஆய்வில் இந்த புதிய நடுகல் கண்டறியப்பட்டுள்ளது.

ஓசூரை சுற்றியுள்ள கிராமங்களான குடிசெட்லு, கொத்தூர், சின்னகொத்தூர், தேர்பேட்டை, உளிவீரனள்ளி, கெலமங்கலம், பைரமங்கலம், பாராந்தூர், தளி, அஞ்செட்டி போன்ற இடங்களில் எல்லாம் குறைந்தது இருபத்தைந்து நடுகல்லாவது இருக்கும். பாரந்தூரில் பாம்பு கடித்து இறந்து போனதற்காக வைக்கப்பட்டுள்ள நடுகல், தேர்பேட்டையில் இருக்கும் யானை குத்தப்பட்டான் கல், பஸ்தியில் இருக்கும் புலிகுத்தப்பட்டான் கல், சின்னகொத்தூரில் இருக்கும் குதிரை குத்தப்பட்டான்கல் என இப்படி பலவகையான நடுகற்கள் இருந்தாலும் இது புதுவகையான நடுகல்லாகும்.

தேன்கனிகோட்டையிலிருந்து பயணித்து இடதுபுறம் திரும்பி பெட்டமுகிலம் போகும் சாலையில் பத்து கி.மீ தூரம் பயணம் செய்தால் சந்தனப்பள்ளி வருகிறது. ஊர் பேருந்து நிறுத்தத்திலிருந்து சற்றுதூரம் தள்ளி இடதுபுறம் திரும்பி விவசாய நிலம் வழியே நடந்து சென்றால் பன்னியம்மன் ஏரிகோடி வருகிறது. இங்குதான் இந்த வகையான நடுகல் இருக்கிறது. கல்வீடு அமைப்பில் செய்யப்பட்ட அமைப்பில் இடதுபுறக் கல்லில் இக்கற்சிற்பம் செதுக்கப்பட்டுள்ளது. 13 அல்லது 14 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த இந்த நடுகல் மூன்று பெண்சிற்பங்கள் மூன்று குதிரையின் மீது அமர்ந்துள்ள நிலையில் செதுக்கப்பட்டுள்ளது.மூன்று பெண்களின் வலது கரத்தில் சிறிய ஆயுதமும் இடது கரம் மேல்நோக்கி மடிந்த நிலையிலும் செதுக்கப்பட்டுள்ளது.

முதல் மற்றும் மூன்றாவது பெண்சிற்பங்களுக்கு மேல் குடைபிடிக்கப்பட்டுள்ளது. இவ்விரண்டு பெண்களும் அரசிக்கு அடுத்த நிலையிலிருந்து போர் செய்பவர்களாக இருக்க வேண்டும்.நடுவில் உள்ள பெண்சிற்பம் அரசியாக இருக்க வேண்டும். அவரின் தலைக்கு மேல் மட்டும் வெண்கொற்றக்குடை பிடிக்கப்பட்டுள்ளது.

இவ்வூரைப் பெண்ணரசி ஆட்சி செய்திருக்க வேண்டும். அப்படி ஆட்சி செய்யும்போது ஏற்பட்ட சண்டையில் இம்மூவரும் இறந்திருக்க வேண்டும். போரில் இறந்து போன இவர்களின் நினைவாக எடுக்கப்பட்ட நடுகல்லாக இருக்க வேண்டும். மேலும் ஒரு போர் வீரர் வாளும், கேடயத்துடன் முன்வரிசையில் நிற்கிறார். அரசியின் பாதுகாப்புப் படைவீரராக இருக்க வாய்ப்பிருக்கிறது. இச்சிற்பங்களின் மேற்புறத்தில் சிறுசிறு கோடுகள் நிறையச் செதுக்கப்பட்டுள்ளதை பார்க்கும் போது போர் நடந்த இடம் போல் காட்சிப் படுத்தப்பட்டுள்ளது. மேலும் இன்னொரு நடுகல்லும் இரண்டு பெண்கள் குதிரையின் மேல் இருப்பதுபோல் சிற்பம் உள்ளது. இன்னொரு வகையில் பார்க்கும்போது விஜயநகரப்பேரரசின் இரண்டாம் கம்பண்ணனின் மனைவி மதுரை விஜயத்தின் போது அரசனின் உடன் சென்று போரில் ஈடுபட்டதுண்டு. அப்படியும் கூட இக்கற்சிலை இருக்கலாம் என்று திரு.வீரராகவன் அவர்கள் கருத்து தெரிவித்துள்ளார். திரு.Dr. பூங்குன்றன் போன்ற தொல்லியல் ஆய்வாளர்கள் பலரும் இது

நடுகல்வகையைச் சார்ந்ததுதான் என்றும் திரு.தி.சுப்பிரமணியன் அவர்கள் இது சதிக்கல்லாக இருக்கவும் வாய்ப்பிருப்பதாக கருத்துரைத்தார்.

இதுவரை கண்டறியப்பட்ட அனைத்து நடுகல்லிலும் ஆண்சிற்பம் வாளோடு நிற்பதும், அருகில் பெண்சிற்பம் நிற்பது போலத்தான் செதுக்கப்பட்டிருக்கும். ஆனால் மூன்று பெண்சிற்பங்கள் குதிரையின்மேல் அமர்ந்து போர் செய்வது போல் காட்டப்பட்டுள்ளது இங்குதான் முதன் முறையாகக் காணமுடிகிறது. இவற்றைப் பாதுகாக்க தொல்லியல் துறையும் மாவட்ட நிர்வாகமும் முன் வர வேண்டும்.

அறம் கிருஷ்ணன்

தலைவர்-அறம் வரலாற்று ஆய்வு மையம் ஒசூர்

Krishnan A Krishnan A

https://www.facebook.com/krishnana.krishnana.9

7. பாணாவாளி அகழாய்வு சிந்து முத்திரையில் ஏறு தழுவல் விளையாட்டு

சேசாத்திரி சிறீதரன்

ஹரியானா மாநிலம், பாணாவாளி என்ற இடத்தில நிகழ்த்தப்பட்ட அகழாய்வில் ஏறு தழுவல் விளையாட்டை மெய்ப்பிக்கும் வகையில் அமைந்த ஒரு தகடு கிடைத்துள்ளது. இந்த முத்திரை கி.மு.2300 - 1700 க்கு உட்பட்ட காலமென வரையறுக்கப்பட்டுள்ளது. ஏற்கனவே, பாகிஸ்தானின் மொஹெஞ்சொதாரோ சிந்து வெளி ஆய்வில், ஒரு முத்திரை கிடைத்தது குறிப்பிடத்தக்கது. இந்த முத்திரையில், சீறி வரும் காளையை அடக்க, பல காளையர் பாய்வது போன்ற கருத்து பொறிக்கப்பட்டுள்ளது.

பாணாவாளி தகட்டில், ஒரு காளையின் மீது ஏறு தழுவும் வீரர் பாய்வது போன்ற காட்சி பொறிக்கப்பட்டுள்ளது. காளையின் மேலும் பின் புறத்திலும் வீரர்கள் இயக்கத்தில் இருப்பது போன்ற காட்சி சித்திரிக்கப்பட்டுள்ளது. - முருகானந்தம் ராசு



Impression of a Banawali seal from c.2300 - 1700 BCE, showing an acrobat leaping over a bull. Source: UMESAO 2000:88, No. 335

வேல் - மா, ı -ன, மாடு - ன். இதில் உள்ள எழுத்துகள் **மானன்** என்ற பெயரை சுட்டுகின்றன. மானன் கஞ்சாறர் ஒரு நாயன்மார். மான் சிங் என்ற பெயரில் அன் ஆண் பால் ஈறு பெறாமல் மான் வருவது காண்க.

மூன்று கிளை மரம் - ந, நாற்கோடு - ன், hypen போன்ற கோடு - அ, மீண்டும் நாற்கோடு - ன், இரு கோட்டு மீன் - சா, இருபுறமும் மும்மூன்று கோடு ∪ - கே, ∪ நடுவில் கோடு - ன, கோட்டின் இருபுறமும் மும்மூன்று கோடுகள் - த்த, வைரவடிவம் - ன். இதில் உள்ள எழுத்துக்கள் **நன்அன் கேனத்தன்** என்பன. **நன்னன் கேனத்தன்** செப்பமான பெயர்.

எருமை உரு பொறித்த இந்த முத்திரையில் முதல் இரு சிறுகோடு - அ, இரு பெரிய கோடுகள் - ண, இருகோடுகளின் கீழ் கவிழ்த்த A - ங்க, வட்டத்துள் வைரம் - ன்.
இதில் உள்ள எழுத்துகள் அணங்கன் என்பன.

சேசாத்திரி சிறீதரன்
sseshadri69@gmail.com

8. ஏறு, எருது, காளை

நூ த லோ சு

ஏறு, **எருது**, **காளை** என்னும் சொற்கள் தமிழில் உள்ளன.
சே; **பெற்றம்**; **பாண்டில்** எனவும் குறிக்கப்படுகின்றன.
விடை; **இடபம்**; **நந்தி** எனவும் திசைச் சொற்கள் உண்டு.
அதான்று,
பாறல்; **புல்லம்**; **மூரி**; **பூணி**; **இறால்** எனவும் திவாகர நிகண்டு காட்டுகின்றது.
OX; BULL என ஆங்கிலத்தில் இரு சொற்கள் உள்ளன.
OX (plural OXEN) என்றால் ஏர் உழ வண்டியிழுக்க பயன்படும்.

காயடிக்கப்பட்டது:
ஆண் ஆன் இதனின் ஆணுறுப்பு பயனற்றதாக செய்யப்பட்டது, அதன் வலிமை முழுதும் இனப்பெருக்கத்திற்குப் பயன்படாமல் நிறுத்தி வேலை வாங்கிப் பயன்கொள்ளவே செய்யப்பட்டவை காயடிக்கப்படும்* காளைகள்.

கொம்பு பொசுக்கியது:
இதனின் கொம்புகள் கன்று நிலையிலேயே தீயிட்டு பொசுக்கி அவை வளராமல் தடுத்து நிறுத்தி கொம்பு வளர உள்ள திறனை வேலை வாங்கி பயன்கொள்ளச் செய்வது.

நந்தி:

தஞ்சை

கோயில்களில் காட்டப்படும் நந்திக்குக் கொம்புகள் இல்லாதமையை காண்க.
இந்நாளில் பெரும்பாலும் இப்படி என்றாலும் கொம்புகள் குறைந்தவையும், முழுதும் உள்ளவையும் காணலாம். எனினும், எல்லாமும் திமில் உடையவையே.
நந்தி = ஆண்
நந்தினி = பெண்

*காயடித்தல் எனும் முறைக்கு ஈடாக மனித இனத்திலும் நடைபெறுவதும் உண்டு. பீத்தோவன் எனும் மேற்கத்திய இசைக்கலைஞர் தனது குரல் வளம் மாறாமல் இருக்க அப்படிச் செய்துகொண்டதாக செய்திகள் உண்டு பிற்காலத்தில் அவர் செவிடாக வாழ்ந்தார் என்பர்.

நூ த லோ சு (நூ.த.லோக சுந்தரம்)
மயிலை
selvindls61@gmail.com

9. 21.1.2017 - கோலாலம்பூரில் நடைபெற்ற த.ம.அ கருத்தரங்கம்

முனைவர் சுபாஷிணி

மலேசியாவில் தமிழர்களின் வாழ்வு என்பது பன்னெடுங்கால வரலாற்றை அடிப்படையாகக் கொண்டது. நீண்ட தொடர்பு தமிழக மக்களுக்கும் மலேசிய நிலப்பரப்பில் வாழ்ந்த மக்களுக்கும் இருந்துள்ளமையை வரலாற்று ஆய்வுகள் உறுதி செய்கின்றன. அந்த வகையில் மலேசிய தமிழர்களின் வரலாற்றுச் செய்திகளையும் அவை தொடர்பான ஆவணங்களையும் பாதுகாக்கும் முயற்சிகளை முன்னெடுக்கவேண்டும் என்ற முனைப்பில் தமிழ் மரபு அறக்கட்டளையின் செயல்பாடுகள் கடந்த சில ஆண்டுகளில் நிகழ்ந்தன. இந்த முயற்சிகளை அதிகாரப்பூர்வமாக்கி செவ்வன செய்திட வேண்டும் என்ற நோக்கத்தில் 2015ம் ஆண்டு தமிழ் மரபு அறக்கட்டளையின் மலேசியக் கிளை பதிவு செய்யப்பட்டு அரசு அங்கீகாரம் பெற்றது.

2017ம் ஆண்டின் முதல் நிகழ்வாக "பண்பாட்டு மீட்சிக்கான தேடல் - பன்னாட்டுப் பார்வையில்" என்ற தலைப்பில் ஒரு நாள் கருத்தரங்கு ஒன்றினை ஏற்பாடு செய்திருந்தோம். தமிழர் பண்பாட்டில் இறையியல் கூறுகளை மையப்படுத்தி இந்த ஒரு நாள் கருத்தரங்கு திட்டமிடப்பட்டிருந்தது. இளம் தலைமுறையினர் அதிகமாகக் கலந்து கொள்ளும் வகையில் பல்கலைக்கழகத்திலும் கல்லூரிகளிலும் இந்த நிகழ்ச்சி தொடர்பாக செய்திகள் பரிமாறப்பட்டதால் அதிகமான இளைஞர்கள் இந்தக் கருத்தரங்கில் வந்து கலந்து கொள்ள வாய்ப்பு அமைந்தது.

இக்கருத்தரங்கில் நான்கு வெவ்வேறு தலைப்புக்களில் சொற்பொழிவாளர்களது உரைகள் வடிவமைக்கப்பட்டிருந்தன.

முதல் சொற்பொழிவு தமிழ் பௌத்தம் பற்றியது. தமிழகத்திலிருந்து வருகை செய்திருந்த எழுத்தாளர்.திரு.கௌதம சன்னா அவர்கள் இந்தச் சொற்பொழிவை வழங்கினார். தமது உரையில் புத்தரின் வரலாறு தொடர்பான செய்திகளிலிருந்து தொடங்கி, அவர் அரண்மனையிலிருந்து வெளியேறியமைக்கான, வழக்கில் இருக்கும் கதைக்கு முற்றிலும் மாறுபாடான ஒரு கருத்தினை முன் வைத்து புதிய தகவல்களை வழங்கினார். புத்தரின் கொள்கைகள், அவரது துறவு அது தொடர்பான தேடல்கள், புத்தமத பிரிவுகள், தமிழில் உள்ள புத்த இலக்கியங்கள், பாலி மொழி தொடர்பான தகவல்கள் மட்டுமன்றி இன்று தமிழர் வாழ்வியலில் வழக்கில் இருக்கும் சடங்குகள், சம்பிரதாயங்கள், வழிபாட்டு முறைகளில் கலந்திருக்கும் பௌத்தத்தின் தாக்கம் பற்றியும் அவரது சொற்பொழிவு அமைந்திருந்தது. முற்றிலும் மாறுபட்ட வகையில் அமைந்திருந்த இச்சொற்பொழிவு, வந்திருந்த பார்வையாளர் மத்தியில் குறிப்பிடத்தக்க கேள்விகளை எழுப்பியதோடு தமிழ் மண்ணில் மட்டுமன்றி மலேசிய சூழலிலும் பௌத்தத்தின் தாக்கம் பற்றி விரிவான ஆய்வுகள் நிச்சயம் தேவை என்பதை உறுதி செய்வதாக அமைந்திருந்தது.

இதனைத் தொடர்ந்து எனது சொற்பொழிவு இடம்பெற்றது. தமிழர் வழிபாட்டில் மிக முக்கிய பங்கு வகிக்கும் குல தெய்வ வழிபாடு பற்றியும் நாட்டார் வழிபாட்டில் இடம்பெறும் தெய்வங்கள் பற்றியும் இந்த உரையில் தகவல்கள் வழங்கினேன். தமிழகத்துக்கான எனது களப்பணிகளுக்கான பயணங்களில் நான் சேகரித்த நாட்டார் வழிபாட்டில் இடம்பெறும் தெய்வங்கள் பற்றிய புகைப்படங்களுடன் கூடிய விபரங்களை வழங்கினேன். இதில் சாமிகள் பற்றிய பின்னணியில் இருக்கும்

கதைகள், செவி வழிச்செய்திகள், சடங்குகள், வழிபாட்டு முறைகள் என்பன பற்றிய செய்திகளையும் வழங்கினேன். தமிழகத்திலிருந்து அன்றைய மலாயாவிற்குப் புலம்பெயர்ந்த தமிழ் மக்கள் தங்கள் குலதெய்வ வழிபாடுகளை தாங்கள் புலம்பெயர்ந்த மலாயாவிலும் ஏற்படுத்தி, இன்று அக்கோயில்கள் பெரிய அளவில் மக்களால் வழிபடப்படும் நிலை இருப்பதையும் எனது சொற்பொழிவில் பகிர்ந்து கொண்டேன்.

மதிய அமர்வில் முதல் பேச்சாளராக பேரா.நா.கண்ணன் தனது கட்டுரையை வழங்கினார். பன்முகத்தன்மையில் எவ்வாறு சங்க இலக்கியம் தொடங்கி தமிழர் வாழ்வில் வழிபாட்டுக் கூறுகள் அமைந்தன என்பதை சுட்டிக் காட்டுவதாக அவரது சொற்பொழிவு அமைந்தது. பக்தி நிலை பற்றி விரிவாகத் தனது சொற்பொழிவில் விளக்கம் அளித்தார். அத்தோடு வைஷ்ணவ பாரம்பரியத்தில் பக்தி நிலை பற்றி குறிப்பிட்டு ஸ்ரீ ராமானுசரின் சமுதாய சீர்திருத்தக் கருத்துக்களையும் முன் வைத்து தனது சொற்பொழிவை நிகழ்த்தினார்.

இந்தக் கருத்தரங்கில் இறுதி சொற்பொழிவாக அமைந்தது திரு.ஒரிசா பாலு அவர்களின் வள்ளலார் பற்றிய ஆய்வுரை. வள்ளலாரின் சன்மார்க்க கருத்துக்களை எளியத் தமிழில் வந்திருந்தோர் புரிந்து கொள்ளும் வகையில் தெளிவாக தனது உரையில் விளக்கமளித்தார். வாடிய பயிரைக் கண்டபோது வாடிய வள்ளலாரைப் போலவே தற்சமயம் தமது பயிர்கள் காய்ந்து கருகி மடிவதைக் கண்டு மனம் தாளாது மடிந்த தமிழக விவசாயிகளைத் தனது உரையில் நினைவு கூர்ந்தார். வள்ளலாரின் முதல் ஐந்து திருமுறைகளை விட ஆறாம் திருமுறையை வாசிப்பதிலும் அதனைப் புரிந்து கொள்வதிலும் நாம் ஆர்வம் காட்ட வேண்டும் என்ற தன் கருத்தை முன் வைத்ததோடு வள்ளலாரை இறைவனாகப் பார்க்காமல் நல்ல சக

மனிதராக, வழிகாட்டியாகப் பார்த்தால் அவரது கருத்துக்களைப் புரிந்து கொள்ளலாம் என்ற அருமையான கருத்தையும் முன் வைத்தார்.

இந்த நிகழ்வைத் தொகுத்து வழங்கிய வழக்கறிஞர் சரஸ்வதி அவர்கள் சொற்பொழிவாளர்களின் கருத்துக்கள் மலேசிய சூழலில் எவ்வகையான தேவைகளை முன்னிறுத்துகின்றது என மிக அழகாகவும் சுருக்கமாகவும் வழங்கியது வந்திருந்த பேராளர்கள் அனைவருக்கும் நிகழ்ச்சியின் தொடர்ச்சியை சரியாகப் புரிந்து கொள்வதற்கு மிக உதவியது.

இறுதியாக நிகழ்வில் நன்றியுரைக் கூறிப் பேசிய தமிழ் மலர் நாளிதழின் நிர்வாக இயக்குநர் திரு.பெரியசாமி அவர்கள் கருத்தரங்க சொற்பொழிவுகள் ஒவ்வொன்றையும் விவரித்து விளக்கமளித்ததோடு இவ்வகைக் கருத்தரங்கங்கள் தொடர்ந்து நடைபெற வேண்டும் என்ற தன் கருத்தையும் வலியுறுத்தினார்.

இந்த நிகழ்ச்சிக்கான ஆதரவினை மலாயா பல்கலைக்கழகத்தின் மொழி மொழியியல் துறையும், தமிழ் மலர் நாளிதழும், ஓம்ஸ் அறவாரியத்தின் தலைவர் திரு ஓம்ஸ் பா தியாகராஜனும் வழங்கியிருந்தனர். திரு. ஓம்ஸ் பா தியாகராஜன் அவர்களது பொதுச்சேவையையும் தமிழ் மேல் அவர் கொண்டிருக்கும் பற்றினையும் தமிழ் மரபு அறக்கட்டளையின் பால் அவர் கொண்டிருக்கும் ஆர்வத்தையும் கருத்தில் கொண்டு இந்தக் கருத்தரங்கில் அவரைத் தமிழ் மரபு அறக்கட்டளை சிறப்புச் செய்து எமது நன்றியைத் தெரிவித்துக் கொண்டோம்.

நிகழ்ச்சியில் வந்து கலந்து கொண்டவர்கள் இவ்வகை நிகழ்ச்சிகள் மீண்டும் நடைபெற வேண்டும் எனக் கூறிச் சென்றது ஆர்வம் அளிப்பதாக அமைந்தது. மலேசிய தமிழ்ச்சூழலில் தரமான நூல் வாசிப்பு என்பது மிக மிகக் குறைவாகவே இருக்கின்றது. தமிழர் வரலாறு பற்றிய அதீதப் போக்கினைப்பற்றிப்பேசி மன நிறைவு கொள்ளும் மனப்பாங்கும் சற்று அதிகமாகவே இருக்கின்றது. இதனைக் கருத்தில் கொண்டு தரமான நூல் வாசிப்பு , மற்றும் தரமான ஆய்வுக் கருத்தரங்கங்கள் ஆகியன தொடர்ச்சியாக ஏற்பாடு செய்யவேண்டும் என்ற கருத்தை தமிழ் மரபு அறக்கட்டளையின் மலேசியக் கிளை முன்னெடுக்கத் திட்டமிட்டுள்ளோம்.

முனைவர்.சுபாஷிணி
ksubashini@gmail.com

10. அது என்ன டெல்டா?

சிங்கநெஞ்சம் சம்பந்தம்

அது என்ன டெல்டா?

காவிரி டெல்டா...காவிரி டெல்டா ...என்கிறார்களே, காவிரி தெரியும், முன்பெல்லாம் அதில் தண்ணீர் வரும். அது என்ன டெல்டா ?

மலைகளில் பிறக்கும் ஆறுகள் கடலை நோக்கி தங்கள் பயணத்தைத் துவக்குகின்றன. மலைச் சரிவுகளில் துள்ளிக் குதிக்கின்றன. அருவிகளாக ஆர்ப்பரித்து கீழ் நோக்கி வெகு வேகமாகப் பாய்கின்றன.

சிவசமுத்திரம் அருவி

நிறைந்த ஆற்றலுடன் பாயும் இந்த ஆறுகள் தங்கள் வழியில் எதிர்ப்படும் பாறைகளைப் பிளக்கின்றன. தூக்கிப் பந்தாடுகின்றன உடைக்கின்றன. சிதைக்கின்றன.. இப்படி சிதைக்கப்பட்ட துகள்களைச் சுமந்து கொண்டு சமவெளியை அடைகின்றன. விரிந்து பரந்து படுகின்றன.

மலைகளில் குறுகலாக வந்த ஆறுகள் கீழே இறங்கி சமவெளியை அடையும்போது விரிந்து போவதால் அவற்றின் வேகம் குறைந்து போகிறது. மலைச்சரிவுகளை ஒப்பிடும்போது சமவெளிப் பகுதியின் சரிவு (Slope) மிக மிகக் குறைவு. இதனாலும் ஆற்றின் வேகம் குறைந்து போகிறது. இதற்கும் மேலாக ஆறுகள் கடலை அடையும் போது, அலைகளின் வேகத்தை எதிர்க்க வேண்டியுள்ளது. இதனாலும் ஆறுகளின் வேகம் குறைகிறது.

ஆற்றின் வேகத்தால் அடித்து வரப்பட்ட பாறைத் துகள்கள், மணல் துகள்கள், வண்டல் மண் போன்றவை, ஆற்றின் வேகம் குறையும் போது மேலும் அடித்துச் செல்லப்பட இயலாமல் ஆற்றின் கரைகளில் வண்டல் படிவங்களாக படியத் துவங்குகின்றன. இப்படிப் படிப்படியாக படியும் வண்டல்கள் உயரும்போது அவை ஆற்றின் போக்கை மாற்றிவிடுகின்றன. அல்லது பிரித்து விடுகின்றன. இப்படி தடம் மாறிச் செல்லும் அல்லது பிரிந்து செல்லும் ஆற்றின் கரைகளிலும் வண்டல்கள் படிந்து மேலும் மேலும் ஆறு பல கிளைகளாகப் பிரிந்து விடுகிறது.



ஆக, ஒரு கோடாக வந்து கொண்டிருந்த ஆறு, கடலை நெருங்கும் போது , பல கிளைகளாக பிரிந்து வண்டல் மண்ணைப் பரப்பி ஒரு புதிய நில அமைப்பை உருவாக்கி விடுகிறது. கிட்டத்தட்ட ஒரு முக்கோண வடிவில் உருவாகும் இந்த நில அமைப்பு கிரேக்க எழுத்து 'டெல்டா' (Δ) வைப் போல் உள்ளதால் இந்தப் பகுதி 'டெல்டா' என்று அழைக்கப்படுகிறது.

கூகுள் பதிமத்தில் அடர் பச்சை நிறத்தில் உள்ளது காவிரி டெல்டா

காவிரி டெல்டா பகுதி , திருச்சிக்கு கிழக்கே கல்லணையிலிருந்து துவங்குகிறது. காவிரி டெல்டாவின் வடக்கு எல்லையாகக் கொள்ளிடம் ஆறு அமைகிறது. ஒரு கோட்டில் வந்து கொண்டிருந்த காவிரி ஆறு, தன் கால்களை விரித்துப் பரவியதால் "காவிரி" ஆனதோ.

படங்கள்: இணையத்திலிருந்து

Singanenjam
singanenjam@gmail.com

11. காமராசரும் கல்வியும்

இராம.கி.

காமராசரையும், கல்வியையும் பற்றிய பேச்சு இங்கு எழுந்தவுடன், 46 ஆண்டுகளுக்கு முந்தைய ஒரு பழைய சிறு நிகழ்வு என் நினைவிற்கு வந்தது.

கோவை நுட்பியற்கல்லூரியில் நான் வேதிப்பொறியியல் படித்த காலத்தில் நெருங்கிய நண்பரில் ஒருவன் அரங்கராசன் நற்சிந்தனையாளன். குமுகவுணர்வும் செயற்துடிப்பும் மிக்கவன். திருச்சிராப்பள்ளித் தென்னூர் அக்கரகத்தைச் சேர்ந்த அரங்கராசன் குடும்பத்தார் திருவிண்ணவ நெறியாளர். நண்பனுக்கு 3 அக்காக்கள். இவன் ஒரே பையன். அம்மா தவறிப்போன காரணத்தால், இரண்டாவது அக்கா தன் கணவரோடு வந்துதங்கி அரங்கராசனின் அப்பா கிருஷ்ணனைப் பார்த்துக்கொண்டார். அரங்கராசன் நண்பர் யாராயினும் அவர்களின் நடுவீட்டு ஊஞ்சல்வரை ஊடி வரமுடியும். அக்கார வடிசல் முதற்கொண்டு எல்லா அமுதுகளும் எங்களுக்குத் தருவார். எங்கள் நண்பர்கள் யாருக்குள்ளும் ஒருவேற்றுமையும் காணாத உன்னதமான குடும்பம்.

அரங்கராசனின் மூத்த அக்கா இலட்சுமி ஒரு காந்தியவாதி. திருச்சிராப்பள்ளி தென்னக இருள்வாய் (Southern Railways) மருத்துவமனையில் செவிலியாய் வேலைபார்த்தார் பொன்மலையில் அவரின் துணைவர் ஒரு பேராயத் தொழிற்சங்கவாதி. திருவிண்ணவரில்லை. இருவருக்கும் எப்படி உறவேற்பட்டது என்று எனக்குத்தெரியாது. துணைவரின் மூத்த மனைவி வேறோரிடத்திலிருந்தார். மூத்தாரின் பிள்ளைகள் அக்காவீட்டிற்கும் வந்துபோய்க் கொண்டிருப்பர். அக்காவிற்குப் பிள்ளைகளில்லை. தென்னூரிலில்லாது அக்கா அத்தானோடு பொன்மலையில்

தங்கியிருந்தார். இவ்வுறவை அரங்கராசனின் அப்பா ஏற்றுக்கொண்டதில்லை. குடும்பத்தில் மற்றவர் ஏற்றும் ஏற்காமலும் இருந்தார். அக்காவும் அத்தானும் தென்னூர் வீட்டினுள் வராவிட்டாலும், வாசல்வரை வந்திருக்கிறார்கள்.

எங்கள்மேல் கொண்ட ஆழ்ந்த அன்பால் அரங்கராசன் அக்கா எங்களெல்லோர்க்கும் அக்காவானார். அப்பொழுதெல்லாம் மதுரைவழிப் பேருந்துகள் குறைந்திருந்ததால் காரைக்குடியிலிருந்து கோவைபோகத் திருச்சிவழி இருள்வாயிற் பயணிப்பேன். திருச்சி வரும்போதெல்லாம் அரங்கராசன் அகத்திற்கும், அக்காவைப் பார்க்கப் பொன்மலைக்கும் போவேன். அகவைமுதிர்ந்த காரணத்தால் அம்மா போலவே அக்கா பரிவுகாட்டுவார். அக்காவோடு அரங்கராசனும் நானும் காரசாரமாய் அரசியல் வாதங்கள் செய்ததுண்டு. 70 களின் காலத்தில். உலகமெங்கும் இடதுசாரிச் சிந்தனை பரவியிருந்தது.. தமிழிளையோர் பலரும் அன்று இடதுசாரி, தி,மு.க.வின் வழி சிந்தனைவயப்பட்டதால், பேராயக்கட்சியை ஏற்காதிருந்தார். எங்களின் பெருமுயற்சியால் பேராயக்கட்சியைத் தோற்கடித்திருந்தோம் அல்லவா? எனவே ஒருவித இறுமாப்பும் கூட எங்களுக்கு வந்தது. (67 இல் விருதுநகரிற் தோற்றிருந்த) காமராசரை வம்பிற்கிழுத்தே பலநேரம் அக்காவுடன் பேசிவிளையாடுவோம். ஆனாலும் அக்கா எங்களைக் கோவிக்கமாட்டார். எம்மேற்கொண்ட அன்பு சற்றுங் குறையாது. “போங்கடா, போக்கத்த பயல்களா? உங்களுக்கு என்னடா அரசியல் தெரியும்?” என்று சொல்லிவிடுவார்.

இலட்சுமியக்காவிற்கு பெருந்தலைவர் காமராசர்மேல் இன்னதென்று சொல்லமுடியாத ஈடுபாடு; ஒரு பக்தி. சொந்தக்காரர், தெரிந்தவரெனப் பலருக்கும் இது பெரும்வியப்பைக் கொடுத்தது. .அரங்கராசன் அப்பாவோ, மூதறிஞர் இராசிமேல் ஆழ்ந்த பற்றுக்கொண்டவர். சுதந்திராக்கட்சி தலைதூக்கிய காலம். எப்படியிருந்தாலும் காமராசரின் பிறந்தநாளுக்கு அக்கா சென்னைக்கு வந்துவிடுவார். எப்படியும் அவரை அன்று கண்டு வாழ்த்துச்சொல்லாது ஓய மாட்டார். 1970-72 இல் சென்னையிலுள்ள இந்திய நுட்பியற்கழகத்தில் நான் முது நுட்பியல் (வேதிப்பொறியியல்) படித்தேன். அரங்கராசன் வெங்காலூர் இந்திய அறிவியற்கழகத்தில் முது பொறியியல் (வேதிப்பொறியியல்) படித்தான். நாங்கள் இருவருமே இடதுசாரிச் சிந்தனையில் தீவிரமாய்ச் சென்றுகொண்டிருந்தோம். அக்காவிற்கும் அது தெரியும்.

1971 இல் நாட்டில் மாற்றங்கள் நடைபெற்ற காலம். 1969 இல் பிரிந்துபோன இந்திராகாந்தி தனக்கென ஒரு பேராயக்கட்சியை உருவாக்கிப் 1971 மார்ச்சுத் தேர்தலில் பெருவெற்றி ஈட்டியிருந்தார். சிண்டிகேட் இண்டிகேட் என்று பேராயக்கட்சி இரண்டாய் உடைபட்டது. தமிழகத்திலோ கலைஞர் தலைமையில் தி.மு.க. பென்னம்பெரிய வெற்றிபெற்றது. நாகர்கோயிலில் பாராளுமன்ற உறுப்பினராய் காமராசர் தேர்ந்தெடுக்கப்பெற்ற போதும் அவர் சார்ந்த நிறுவனப் பேராயம் (Organization Congress) மிகுந்த தோல்விகண்டு சோர்ந்துகிடந்தது. சட்டப்பேரவையிலும் பேராயக்கட்சியினர் வெறும் 15 பேராய்க் குறுகிப்போனார். பெருந்தலைவர்

நிகழ்ச்சிகளிற் கலந்துகொள்வது குறைந்துபோயிருந்தது. 1971 தேர்தலுக்கப்புறம் நன்றிதெரிவிக்கும் கூட்டம் சைதாப்பேட்டையில் நடந்த போது அவருடைய நொகையான பேச்சைக்கேட்டு அதிர்ந்துபோனேன். இப்படி இவர் மக்களைத்திட்டினால் எப்படி இனி இவருக்கு வாக்களிப்பர்? பென்னம் பெரிய கட்சிக்குப் ஒரு பொதிவானதிட்டம் வேண்டாமா? வெறுமே சு.ம. பயல்கள் என்று எதிரியைக் குற்றஞ்சாட்டினாற் போதுமா? இப்படியெல்லாம் எண்ணம் ஓடிக்கொண்டிருந்தது. அவர்மேல் எனக்குக் கிடுக்கங்கள் (criticisms) நிறைய இருந்தன. நாளைக்கே புரட்சி வந்துவிடப்போகிறது என்பதுபோல் எண்ணிக்கொண்ட இளம்பிள்ளைவாதம் எம்முள் குடிகொண்டிருந்தது.

1971 ஆம் ஆண்டு சூலைமாதம் 15 ஆம் நாள். ஏற்கனவே வெங்காலூரிலிருந்து அரங்கராசன் வந்திருந்தான். திடீரென்று அன்றுகாலை திருச்சியிலிருந்து 11/12 மணிக்கு இலட்சுமியக்கா சென்னை இ.நு.க. கிருட்டிணா விடுதிக்கு வந்துசேர, "என்னவிது? என்னைத்தேடி வந்திருக்கிறார்" என்று வியந்துபோனேன். அக்காவை விருந்தோம்பியபின் பேசிக்கொண்டிருந்தோம். "புறப்படுங்கடா, தலைவரைப் பார்க்க; இன்னைக்கு அவர் பிறந்தநாள். மாலையில் அவர் வெளிநிகழ்ச்சிகளுக்குப் புறப்படுமுன் பார்க்கலாம்" என்றார். "வேண்டாங்க்கா, ஏதாவது இடக்குமடக்காக நாங்கள் அவரிடம் பேசிவிட்டால் உங்களுக்கும் கஷ்டம், நீங்கள் பாட்டிற்கு உங்கள்தலைவரைப் பார்க்கச்செல்லுங்கள். நாங்கள் இங்கே கதைத்துக்கொண்டிருக்கிறோம். இன்றுமாலை சில தோழர்கள் வருவதாகச் சொன்னார்கள்." என்றுசொன்னோம். அக்கா ஒப்பவில்லை. "உங்களுக்கு என்னடா அரசியல்பற்றித் தெரியும்? வெறும் தியரி பேசுவீர்கள். புரட்சி வந்துருச்சா? உள்ளேர்ந்து ஊறி என்ன பேச்சு வருமென்று உங்களுக்கு அனுபவமுண்டா?" என்றுகேட்டார். "இவ்வளவு தூரம் சொல்கிறாரே! பெரியவர் நம்பூதிரிப்பாட்டையே மறுத்துக்கிடந்த நாம் இவருக்குப்பிடித்த தலைவரையும் தான் பார்த்து விடுவோமே?" என்று எங்களுக்குள் மருக்கமும் கிடுக்கமும் இருந்தாலும் புறப்பட்டோம்..

இன்று காமராசர் நினைவில்லமாய் இருக்கிறதே அத் திருமலைப்பிள்ளைத் தெரு வீட்டிற்கு மாலை 3.30 மணி அளவிற் போய்ச்சேர்ந்தோம். வீட்டுக்கு வெளியில் யாரும் அவ்வளவாயில்லை. ஓரிருவர் வந்துபோய்க் கொண்டிருந்தார். பிற்பகல் பெருந்தலைவர் மாடியில் ஓய்வெடுக்கும் நேரம். 4 மணிக்குத் தான் கீழே வருவார் என்று தெரியும். தலைவரைப் பார்க்கவந்திருப்பதை அக்கா உதவியாளரிடம் சொன்னார். கீழே காத்திருந்தோம். 15 நுணுத்தங்களில் அவர் எழுந்து தன்னைச் செவ்விக்கு அணிமைசெய்தது தெரியவந்தது. அக்கா மேலேபோய் வாழ்த்துச்சொல்லி ஆசிபெற்று எங்களையும் கூட்டி வந்திருப்பதைச் சொல்லியிருப்பார் போலும். 10 நுணுத்தங்கள் அவர்கள் கட்சிநிலை பற்றிப் பேசிக்கொண்ட பின்னால் ஓர் உதவியாளர் வழி எங்களிருவரையும் மேலேயழைத்தார்.

அப்பொழுதுதான், அவ்வளவு நெருக்கத்தில் நான் பெருந்தலைவரைப் பார்த்தேன். “வாங்க, தம்பி” என்றழைத்தார். தயங்கித்தயங்கி நாங்கள் உள்ளே சென்றோம். பிறந்தநாள் வாழ்த்துக்களையும், வணக்கங்களையுஞ் சொன்னோம்.

“அப்புறம் லெட்சுமி, இவரு யாரு?, இவரு யாரு?”

“ஐயா, இவன் என் தம்பி, ரங்கராஜன், இவன் அவன் நண்பன் கிருஷ்ணன். உங்களைப் பார்க்கணும்னு கூட்டிக்கிட்டு வந்தேன். இவங்கள்லாம் உங்களை நம்ப மறுத்து. என்னோடெ வழக்காடிக்கிட்டே யிருப்பாய்ங்க. ஆனாலும் இவய்ங்களை உங்களுக்கு அறிமுகப்படுத்தோணும்னு கூட்டிட்டு வந்தேன்.”

“அப்படியா, நல்லது! தம்பி என்ன பண்ணுறீங்க”

“ஐயா, இங்கே சென்னை ஐ,ஐ,டி,யில் எம்டெக் (கெமிகல் இஞ்சினியரிங்) படிங்கிறேங்கய்யா. இவன் பெங்களூர் ஐ.ஐ.எஸ்ஸியில் எம் இ.(கெமிகல் இஞ்சினியரிங்) படிக்கிறான்.”

அரங்கராசனைப் பார்த்துச் சில கேள்விகள் கேட்டார். அவர்கள் அப்பாவைப் பற்றியும் விசாரித்தார். திரும்ப என்னைப் பார்த்து,

”தம்பி, உங்களுக்கு எந்தவூரு”

“காரைக்குடிக்குப் பக்கமய்யா”

“அப்படியா நம்மூரு. ராமநாதபுரம் மாவட்டம். ஊருலே மழை கிழை பெய்யுதா? போற வர்ரப்பல்லாம் பாக்குறேனே? ஒரு பொட்டுத் தண்ணியில்ல. இன்னும் மாடுவிரட்டி மேய்ச்சுக்கிட்டு நம்ம பயக இருக்காய்ங்களா? நல்லாப் படிக்கணும் தம்பி ”படிங்கடா, படிங்கடா”ன்னு சொல்லிச்சொல்லி நாதான் வறண்டுபோகுது. எங்கே கேக்குறாய்ங்க?”.

“இன்னம் மழை வரல்லைய்யா! படிப்பு முக்கியந்தான்யா. நிச்சயம் படிப்பொம்யா!

எங்களுடைய பழைய பள்ளி, கல்லூரிக் கல்வி விவரங்களை ஓரளவு கேட்டறிந்தார். ”எல்லாத்தையும் பேசுங்க, அலசுங்க. ஆனாப் படிங்க” என்றபடி மீண்டும் சில அறிவுரைகள். அடுத்த நிகழ்ச்சிக்குப் போக நேரமாகிவிட்டதை உதவியாளர் ஞாவகப்படுத்தினார். நாங்கள் கீழேயிறங்கிவந்த பிறகும், அக்காவும் தலைவரும் 10 நுணுத்தங்கள் கட்சிவிவரங்களைப் பேசியபின் மாடியிலிருந்து கீழே வந்தனர். அங்கிருந்து அவருடைய பழைய அம்பாசிடர் வண்டியில் ஏறிச்செல்லும்வரை பார்த்துக்கொண்டிருந்தோம். கீழே 7,8 பேர் அவரைச் சந்திக்கக்

காத்துக்கொண்டிருந்தார். ஒருசில முகமன்களைக் கூறிவிட்டு அங்கிருந்து அவர் புறப்பட்டுவிட்டார்.

தான் முற்றுமுழுதாக முடிந்துபோன காலத்திலும் அவர்சிந்தனை இளைஞர் படிக்கவேண்டுமென்பதிற்றான் இருந்தது. கல்விக்காக அவரெடுத்த முயற்சிகள் ஒவ்வொன்றும் இந்நிகழ்வின் ஊடாக அடியுணர்வில் எழும்பிவந்தது புரிந்தது. ஒரு பெருந்தலைவனை அப்படித்தான் இன்றும் நினைவு கூருகிறோம்."நல்லாப் படிக்கணும் தம்பி" இன்றும் அந்த வாசகம் என் காதுகளில் ஒலிக்கிறது. அவர் வாழ்க்கையின் சாரம் அதுதான். கல்வி என்று வந்தால் காமராசர் தான் என்கண்ணில் நிலைத்துநிற்பார். அக் கருப்புத்தமிழன் இல்லாது தமிழ்நாட்டிற் கல்வியேது?

பி.கு: தோல்வியில் நைந்துபோன, மனம்வெறிச்சொடிய, காமராசரின் வாழ்க்கை அதற்கப்புறம் 4 ஆண்டுகளில் முடிந்தது.

படங்கள்: இணையத்திலிருந்து

இராம.கி.
poo@giasmd01.vsnl.net.in
http://valavu.blogspot.com

12. பகவத்தஜ்ஜூக அங்கதம்

கௌதம சன்னா

நமக்குக் கிடைக்கும் பழைய நாடகங்களுள் ஒன்று இந்த நூல். இதைப் படைத்தவர் பல்லவ அரசின் மன்னர்களில் ஒருவரான மகேந்திர வர்மர். இந்த நூல் கி பி 640 எழுதப்பட்டிருக்கலாம் என்பது வரலாற்று ஆய்வாளர்களின் கருத்து. எனினும் அவர் எத்தனை இலக்கியங்களைப் படைத்தார் என்பது உறுதியாகத் தெரியாவிட்டாலும், இரண்டு நூல்களை மட்டும் உறுதியாகச் சொல்ல முடியும். அவை மத்தவிலாச பிரஹசனம் மற்றும் பகவத்தஜ்ஜூக அங்கதம் ஆகியன.



இந்த இரண்டு நாடகங்களும் சமஸ்கிருத மரபினை பின்பற்றி எழுதப்பட்டவை என்பதை தமது பகவத்தஜ்ஜூகத்தில் தெளிவு படுத்தியுள்ளார் மகேந்திர வர்ம பல்லவர். சமஸ்கிருதத்தில் பத்து வகையான நாடகங்கள் உள்ளன, அவை: வார (வேண்டுதல்), இகம்ரிக (ஒருதலைக் காதல்), திம (முற்றுகை), சமவக்கார (தொடர்பற்றுத் தொடங்கி ஒரு முடிவை அடைதல்), வியாயோக (போர்பூசல்), பாண (ஒரு நபர் காதல், வீர நாடகம்), சல்லாப (தொடர்பற்ற உரையாடல்), வீதி (ஒருவர் அல்லது இருவர் காதல்), உத்சிரிஷ்டிகாங்க (துக்க), பிரஹசன (அங்கத அல்லது நையாண்டி) என்ற வகையில் உள்ள நாடக பாணிகளில் அங்கத வகையில்தான் மன்னர் மகேந்திரர் தமது நாடகங்களை எழுதியுள்ளார்.

மன்னர் மகேந்திரர் எழுதிய இரண்டு நாடகங்களில் பகவத்தஜ்ஜூகத்தை அவர் எழுதவில்லை என்று மயிலை சீனி வேங்கிடசாமி போன்ற அறிஞர்கள் மறுக்கின்றனர். காரணம் பகவத்தஜ்ஜூகத்தை மகேந்திரர் எழுதியிருந்தால் பகவத்தஜ்ஜூகா என்ற விருது பெயர் அவருக்கு வாய்த்திருக்கும் என்று தமது மறுப்பை முன்வைக்கிறார். ஆனால் இரு நாடகங்களையும் பதிப்பித்த எம்.சி.லாக்வுட் பகவத்தஜ்ஜூகம் மன்னர் மகேந்திரர் எழுதியதுதான் என்று உறுதியாகக் கூறுகிறார்.

லாக்வுட் அவர்களின் கருத்தோடு நானும் உடன்படுகிறேன். இரண்டு நாடகங்களையும் எழுதியது மன்னர் மகேந்திரர்தான். அதற்கு இரண்டுக் காரணங்களைக் கூறமுடியும். முதல் காரணம், இரண்டு நாடகங்களும் ஏறக்குறைய ஒரே மாதிரியான பின்னணியில் அதாவது அரசவையினர் முன்பு நடித்துக் காட்ட வேண்டும் என்ற நோக்கத்தை முன்னிறுத்தித் தொடங்கப்படுகின்றன. இரண்டாவது காரணம், இரண்டு நாடகங்களும் பௌத்தத்தைக் கடுமையாகக் கேலி செய்கின்றன. பௌத்தத்தை அழித்தவருக்கு அதை மக்கள் தளத்தில் அழிக்க வேண்டும் என்றால் அதற்கு ஊடகமும் ஓர் எளிய வழிதானே! அதில் ஒன்றாக நிகழ்த்துக் கலையை மன்னர் தேர்ந்தெடுத்தார்.

மகேந்திரபல்லவர் எழுதிய பகவத்தஜ்ஜூகா பௌத்தர்களின் ஒரு நிலையான பரிவ்ராஜகா நிலையினை மேற்கொண்டிருக்கும் ஒருவரை மையப்படுத்தி நிகழ்கின்ற கதை. அதன்படி பரிவ்ராஜகர் என்றால் உண்மையைத் தேடி அலையும் நிலையில் இருப்பவர் என்று பொருள். சற்றேறக்குறைய அவர் பிக்கு நிலையை எட்டக்கூடிய நிலையில் இருப்பவர். உண்மையைத் தேடி அலையும் ஒரு பரிவ்ராஜகரை முட்டாளாகக் கற்பித்துக் கொண்டு அவரைக் கேலியும் கிண்டலும் செய்யும் நாடகம் இது. பௌத்தத்தின் மீது மகேந்திரனுக்கு இருந்த வெறுப்பும் காழ்ப்பும் இந்த நாடகத்திலும் இதற்கு முன்னர் எழுதிய மத்தவிலாச பிரஹசனத்திலும் காணமுடியும்.

ஜா. கௌதம சன்னா
g.sannah@gmail.com

13. திருப்பதி – திருமலை தோரணக் கல்

சிங்கநெஞ்சம் சம்பந்தம்

நேச்சுரல் ஆர்ச் என ஆங்கிலத்திலும் ஷிலா தோரணம் என்று தெலுங்கிலும் (ஷிலா என்றால் பாறை அல்லது கல் என்று பொருள்) அழைக்கப்படும் தோரணக்கல் திருப்பதி-திருமலையில் உள்ளது. 1980 களில் இந்திய புவியியல் ஆய்வுத்துறையைச் சேர்ந்த புவியியலாளர்கள் இந்தப் பகுதியில் ஆய்வுகள் மேற்கொண்டபோது இந்த தோரணக் கல்லை கண்டறிந்து உலகிற்கு தெரியப் படுத்தினர். தோரண வாயிலின் அகலம் 8 மீ. உயரம் 3 மீ. திருக்கோவிலுக்கு வடக்கே 600 மீ. தூரத்தில் உள்ள இந்த இடத்திற்குச் செல்ல சாலை வசதிகள் உண்டு. வராகீஸ்வரர் கோவிலிலிருந்து நடந்தும் செல்லலாம். 15- 20 நிமிடங்கள் ஆகும்.



திருமலையில் கோட்டை சுவர் போல் நிற்கும் குவார்ட்சைட் பாறைகள்.

இந்தத் தோரணக்கல் ஓர் இயற்கை வடித்த இனிய சிற்பம். இயற்கை வடித்த இனிய சிற்பங்கள் உலகெங்கிலும் காணப்படுகின்றன. உளியும் இல்லாமல் சுத்தியலும் இல்லாமல் இந்தச் சிற்பங்களை செதுக்கியது , புவியியலில் geological agents என அழைக்கப்படும் காற்று, மழை, வெயில், ஆறு, பனியாறுகள் ஆகியவையே ஆகும். இந்தச் சிற்பிகளின் திறனை மென் பாறைகளான மணற்பாறை, களிமண் பாறை , சுண்ணாம்புப்பாறை போன்ற படிவப்பாறைகளில் நன்கு காணலாம். உலகின் புகழ்

மிக்க நேச்சுரல் ஆர்ச் எல்லாம் பெரும்பாலும் படிவப் பாறைகளிலேயே அமைந்துள்ளன.

ஆனால் திருமலை தோரணக் கல்லோ குவார்ட்சைட் எனப்படும் உருமாற்றுப்பாறையில் அமைந்துள்ளது. சென்னையிலிருந்து திருப்பதி செல்லும் வழியில் உள்ள நகரி குன்றுகளில் முதலில் கண்டறியப்பட்டதால் இவை 'நகரி குவார்ட்சைட்' என்று அறியப்படுகின்றன. (அத்திராம்பாக்கத்திலும் , குடியம் குகை பகுதியிலும் கற்கால ஆயுதங்கள் செய்ய பயன்பட்ட கூழாங்கற்களின் தாயகம் நகரி குவார்ட்சைட் பாறைகள்தான் என எண்ண இடமுண்டு.) இந்தப் பாறைகளின் வயது 160 கோடி ஆண்டுகள் என மதிப்பிடப்பட்டுள்ளது. பாறைகள் தோன்றிய பின்னரே தோரணக்கல் அமைப்பு தோன்றியிருக்க வேண்டும். ஆதலின் தோரணக் கல்லின் வயது சற்று குறைவாகத்தான் இருக்க வேண்டும்.

குவார்ட்சைட் பாறைகள் மிகவும் வன்மையானவை. ஆதலின் இயற்கை சிற்பிகளின் கைவண்ணம் இங்கே அதிகம் பலித்திருக்காது. மாறாகப் பாறையில் ஏற்பட்டுள்ள விரிசல்களும் பிளவுகளுமே தோரணக் கல் அமைப்பு உருவாகக் காரணமாக இருந்திருக்கவேண்டும். பாறைகள் அழுத்தத்திற்கு உட்படும்போது அவற்றில் விரிசல்கள் உருவாகின்றன. தொடர்ந்து பல லட்சக்கணக்கான ஆண்டுகள் இந்தப் பாறைகள் வெப்பத்தில் விரிவதாலும் குளிரில் சுருங்குவதாலும் இந்த விரிசல்கள் பிளவுகளாக மாறுகின்றன. பிளவுகள் குறுக்கும் நெடுக்குமாக அமையும் போது பாறைகள் துண்டாகி விழுகின்றன. இந்த முறையில்தான் தோரணக் கல் உருவாகியிருக்கவேண்டும்.

தோரணக் கல் வளைவு

தோரணக் கல் வளைவு

தோரணக் கல்லை பார்வையிட வரும் பக்தர்கள், 'பெருமாளின் உயரமும் இதன் உயரமும் ஒன்றே ...பெருமாளே இங்கேயும் வாசம் செய்கிறார்' என்று நம்புவதோடு இதில் ஆதி சேஷனையும் , சங்கு சக்கரத்தையும் கண்டு வழிபடுகிறார்களாம். நம் கண்களுக்கு குவார்ட்சைட் பாறையைத் தவிர வேறு எதுவும் தெரியவில்லை.

படங்கள்: இணையத்திலிருந்து

Singanenjam

singanenjam@gmail.com

14. விழுப்புரம் வடக்கு இரயில்வே காலனி...

கோ.செங்குட்டுவன்

இந்தியாவில் ஐரோப்பியர்களின் மிச்ச சொச்சங்களாக இன்றும் நிலைத்திருப்பவற்றுள், அவர்களின் கட்டடங்களைச் சொல்லலாம்.

தமிழகத்தில் இரயில் பாதையின் நெடுகிலும், முக்கிய சந்திப்புகளில் இந்த மாதிரியானக் கட்டடங்கள் நூறாண்டைக் கடந்தும் நம்முன் வாழ்ந்து வருகின்றன.

அவர்கள் உருவாக்கிய இரயில்வே குடியிருப்புகள் தனிச்சிறப்பு வாய்ந்தவைதாம்.

உயர் அதிகாரிகள் முதல் கடைநிலை ஊழியர் வரையிலுமாக அனைவருக்கும் குடியிருப்பு. ஒவ்வொரு நிலையினருக்கும் தனித்தனியான வடிவமைப்புகளில் வீடுகள்.

சில, ஓடுகள் மட்டும் வேயப்பட்டும், மேலும் சில ஓரடுக்கு, ஈரடுக்குடனும் காட்சியளிக்கும்.

ஆனாலும், ஒவ்வொரு வீட்டைச் சுற்றிலும் கண்டிப்பாகத் தோட்டம் உண்டு. ஒட்டுமொத்தமாக இக்குடியிருப்புகளை மரங்கள் சூழ்ந்திருக்கும்.

ஐரோப்பியர்கள் அழகியல் உணர்வுடையவர்கள் என்பதற்கு இத்தகுக் குடியிருப்புகள் சான்றுகளாகும்.

தமிழ்நாட்டில் குறிப்பிடத்தகுந்த இரயில்வே குடியிருப்பாக அமைந்திருப்பது, விழுப்புரத்தின் வடக்கு இரயில்வே காலனி.

ஒரு காலத்தில், சட்டைக்காரர்கள் காலனி என்றழைக்கப்பட்டப் பகுதி. அப்போதெல்லாம், விழுப்புரம் இரயில் நிலையத்தில், ஆங்கிலோ இந்தியர்கள்தான் பெருமளவில் பணியில் இருந்திருக்கின்றனர்.

அவர்கள் குடியிருந்த இந்தப் பகுதி, மக்கள் மொழியில், சட்டைக்காரர்கள் காலனி எனப்பட்டது.

பல நூறு ஏக்கர் பரப்பளவில் அமைக்கப்பட்ட இக்குடியிருப்பு, விழுப்புரத்தின் தனி உலகம்.

காலம் மாறியது. ரயில்வேயில் ஆங்கிலோ இந்தியர்களின் ஆதிக்கம் குறைந்தது. அவர்களின் புலம்பெயர்வுகளும் தொடங்கின.

இப்போது, விழுப்புரத்தில் விரல்விட்டு எண்ணக்கூடிய அளவில்தான், இந்தச் சட்டைக் காரர்கள் வசிக்கின்றனர்.

வடக்கு இரயில்வே காலனியிலும், பெரும்பாலான வீடுகள் காலியாகவே கிடக்கின்றன. இதில் மிகப்பல வீடுகள் சிதிலமடைந்து, டிமாண்டி காலனிபோல் காட்சியளித்து வருகின்றன.

இத்தகைய வீடுகளை இடித்து அகற்ற முடிவுசெய்துள்ள இரயில்வே நிர்வாகம், கடந்த சில நாள்களாக அந்தப் பணியில் ஈடுபட்டு வருகிறது.

பல வீடுகள் இடித்துத் தரை மட்டமாக்கப்பட்டுவிட்டன. இடிக்கப்பட்டும் வருகின்றன.

இடிக்கப்பட்ட இடங்களில் வெள்ளைக் கற்களின் குவியல். ஆம், செங்கற்கள் அப்படித்தான் காட்சியளிக்கின்றன. கட்டடம் முழுக்க சுண்ணாம்புக் கலவையால் கட்டப்பட்டுள்ளதே, இதற்குக் காரணம்.

ஐம்பது, நூறாண்டுக்கு முன்பு பலரது கனவுகளையும், கற்பனைகளையும் சுமந்து திரிந்த இந்தக் கட்டடங்கள், இன்று மண்ணோடு மண்ணாகிவிட்டன.

இதில் வாழ்ந்தவர்கள், இப்படிப் பார்க்கும்போது, அவர்களது மனசு நிச்சயம் கனத்துப் போகும்!

பழையன கழிதல் வேண்டும்தானே?

பழைய கட்டடங்கள் இடிக்கப்படும் அதே நேரம், இங்குள்ள மரங்கள்..?

இந்த மரங்களுக்கு எப்படியும் குறைந்தபட்சம் ஐம்பது வயதாவது இருக்கலாம்.

நகரமயத்திற்கு இரையாகிவிட்ட விழுப்புரத்தில், உயிர் வாழும் வனமாக இருப்பது, வடக்கு இரயில்வே காலனி மட்டும்தான்.

எத்தனை விதமான மரங்கள், அதிலிருந்து வீசும் வாசங்கள், பெயர் தெரியாத பறவைகளின் சங்கீத ஒலிகள்... இந்த மரங்கள், வனம் வாழத்தான் வேண்டும்..!

மேலும், இடிக்கப்பட உள்ள கட்டடங்கள் சிலவற்றின் புகைப்படங்கள் உங்கள் பார்வைக்கு இப்போது...

சில கட்டடங்களைப் பழமை மாறாமல் பாதுகாக்கலாம்.

முக நூலில் : கோ.செங்குட்டுவன்
ABANDONED

முக நூலில் : கோ.செங்குட்டுவன்

பழையனவற்றின் எச்சங்கள் இருக்கத்தான் வேண்டும். வருங்கால தலைமுறையின் நினைவுகளுக்காக இருக்க வேண்டும்.

ஏன், புதுவையில் இன்னும் பிரெஞ்சுப் பெயர்களில் ஆன வீதிகள், கட்டடங்கள், காவல்துறையின் சீருடைகள் இன்றளவும் நின்றுள்ளனவே?

கோ.செங்குட்டுவன்
ko.senguttuvan@gmail.com

15. சீகன் பால்கு ஆரம்பித்த பள்ளிக்கு 300 வயது

சிங்கநெஞ்சம் சம்பந்தம்

எனக்குக் கல்வி செல்வத்தை வழங்கியது, "தூய தாவீது உயர்நிலைப் பள்ளி" (St. David High School). இன்று தூய தாவீது மேல்நிலைப் பள்ளி என்று அழைக்கப்படுகிறது. இந்தப் பள்ளி கிழக்கிந்திய கம்பெனியின் முக்கியமான வியாபாரத்தலமாக விளங்கிய கூடலூரில் (இன்று கடலூர் என்று வழங்கப் படுகிறது), 1717ஆம் ஆண்டில் துவக்கப்பட்டது . பள்ளியின் நுழைவாயிலில் உள்ள பெயர்ப் பலகையில் ESTD.1717 என்று பெருமையாக எழுதியிருப்பார்கள். இவ்வளவு பழைமையான பள்ளி தமிழ்நாட்டில் வேறு எங்கேனும் இருக்கிறதா என்பது தெரியவில்லை. பெரியவர்கள் இந்தப் பள்ளியை SPG School என்றே அழைப்பர். பலருக்கும் இந்த SPG என்றால் என்னவென்று தெரியாது. பதினோராம் வகுப்பு படிக்கும்போது எங்கள் தலைமை ஆசிரியர் அருமைநாயகம் அவர்கள்தான் (பெயருக்கு ஏற்றபடி அருமையான மனிதர், ஆசிரியர்களில் நாயகம்) SPG என்பது SOCIETY FOR PROPAGATION OF GOSPEL என்பதின் சுருக்கம் என்றும் , இந்தப்பள்ளி அந்த SOCIETY யால் நிர்வகிக்கப்பட்டு வந்தது என்றும் விளக்கம் அளித்தார்.



கூடலூர் செயின்ட் டேவிட் கோட்டையிலிருந்து வியாபாரம் செய்து வந்த கிழக்கிந்திய கம்பெனியினர் 1698 ஆம் ஆண்டு, 'இந்தியாவில் கம்பெனியின் அதிகாரத்தின் கீழ் உள்ள இடங்களில் கம்பெனியில் பணி புரியும் பிரிடிஷ்காரர்களுக்காகவும் அவர்களுக்குப் பணி புரியும் இந்திய வேலைக்காரர்களுக்காகவும் பள்ளிகள் திறக்கப்பட வேண்டும்' என்று ஆணை ஒன்றைப் பிறப்பித்தனர். இதே கால கட்டத்தில் லண்டனில் துவக்கப்பட்ட "SOCIETY FOR PROPAGATION OF CHRISTIAN KNOWLEDGE (SPCK) " அமைப்பும், குடியேற்ற நாடுகளில், கிறித்துவ மதத்தைப் பரப்புவதற்காக பள்ளிகள் துவங்கப்பட வேண்டும் என்று வலியுறுத்தியது. ஆயினும் சரியான ஆசிரியர்களும் நிர்வாகிகளும் கிடைக்காத காரணத்தால் இந்த ஆணை நிறைவேற்றப்படவில்லை.

இதற்கிடையில் 1706 ஆம் ஆண்டு சீகன் பால்கு (Bartholomaus Ziegenbalg) எனும் ஜெர்மானியர் தரங்கம்பாடியில் வந்திறங்கினார். இந்தியாவிற்கு வந்த முதல் பிராட்டடஸ்டன்ட் மதகுரு இவர்தான். முதன் முதலில் கிறித்துவ வேதாகமத்தைத் தமிழில் மொழிபெயர்த்தவரும் இவரே. இவர் தரங்கம்பாடியில் பள்ளி ஒன்றினை நிறுவி தமிழ் மற்றும் போர்த்துக்கீசிய மொழிகளில் பாடங்கள் நடத்தி வந்தார். நாகப்பட்டினத்தைச் சேர்ந்த சவரிமுத்து இங்கே ஆசிரியாராகப் பணி புரிந்து வந்தார். இவர் மீனவர் குலத்தை சேர்ந்தவர்.

1715-16 ஆம் ஆண்டில் சென்னையில் கிழக்கிந்திய கம்பெனியின் கவர்னாராக இருந்த எட்வர்ட் ஹாரிசன், சீகன் பால்குவின் உற்ற நண்பர் கிரண்ட்லரிடம் சென்னையிலும் கூடலூரிலும் பள்ளிகள் துவக்கும்படி வேண்டினார். அதுசமயம் சீகன்பால்கு ஐரோப்பா சென்றிருந்ததாலும் சரியான ஆசிரியர் இல்லாததாலும் கிரண்ட்லரால் இந்த வேண்டுகோளை ஏற்றுக் கொள்ள முடியவில்லை.

ஐரோப்பாவிலிருந்து திரும்பிய சீகன் பால்குவிடம் SPCK, பள்ளிகள் திறக்கும்படி மீண்டும் வேண்டியது. இதன் விளைவாக 1717 ஆம் ஆண்டு SPCK வின் ஸ்டீவன்சன் துணையுடன் கூடலூரில் சீகன்பால்கு ஒரு பள்ளியை நிறுவினார். இதுவே எங்கள் பள்ளி. தரங்கம்பாடியில் பணிபுரிந்து கொண்டிருந்த சவரிமுத்து கூடலூர் பள்ளியில் ஆசிரியரானார். SPCK நிர்வாகத்தின் கீழ் பள்ளி இயங்கி வந்தது.

சவரிமுத்து மீனவர் குலத்தை சேர்ந்தவர் என்றாலும், கூடலூரில் வசித்து வந்த பிராமணர், சைவப்பிள்ளை போன்ற உயர்சாதி இந்துக்களும் தங்கள் பிள்ளைகளை அவரிடம் பாடம் கற்பிக்க அனுப்பினர் என்பது குறிப்பிடத்தக்கது. 'டேனிஷ் மிஷன் பள்ளி நம் ஊரிலா' என்று உள்ளூர் பிரிடிஷ்காரர்கள் இந்தப் பள்ளிக்கு இடையூறு செய்திருக்கின்றனர். SPCK வின் கீழ் இயங்கி வந்த இந்தப் பள்ளி 1825 ஆம் ஆண்டு

SOCIETY FOR PROPAGATION OF GOSPEL (SPG) நிர்வாகத்தின் கீழ் வந்தது. அன்று முதல் SPG School எனப் பலராலும் அறியப்பட்டது.

தற்போது தூய தாவீது மேல் நிலைப் பள்ளி (St. David's Higher Secondary School) எனும் பெயரில் தென்னிந்திய திருச்சபையின் (CHURCH OF SOUTH INDIA) கீழ் இயங்கி வரும் எங்கள் பள்ளி இளமையுடன் தன் முன்னூறாவது ஆண்டில் புகழோடு பயணித்துக் கொண்டிருக்கிறது.

(முன்னாள் அமைச்சர் பண்ருட்டி ராமச்சந்திரன் , திராவிடர் கழகத் தலைவர் கி. வீரமணி ஆகியோர் எங்கள் பள்ளியில் பயின்றவர்கள்)

Singanenjam

singanenjam@gmail.com

16. அருவம்

பழமைபேசி

அருவம்

கொடுக்குக்குளவி
என்றார்கள்!
வண்ணத்துப்பூச்சி
என்றார்கள்!
நஞ்சுப்பூச்சி
என்றார்கள்!!
உயரியது
என்றார்கள்!
இழிந்தது
என்றார்கள்!
பற்று
என்றார்கள்!
வெறி
என்றார்கள்!
ஆதிக்கம்
என்றார்கள்!
கொடுமை
என்றார்கள்!
அது
எதுவாகவுமில்லை
எட்ட இருந்தவனுக்கு!!

-பழமைபேசி

பழமைபேசி
pazamaipesi@gmail.com

17. எழுத்துக்களை ரத்த சதையாக்கிய அசோகமித்திரன்

ருத்ரா இ.பரமசிவன்

"எனக்குப் பிடிக்காதது என்றால்
'தண்ணீர்', 'கரைந்த நிழல்கள்'
ஆகியவற்றைச் சொல்லலாம்.
என்னவோ அவற்றை எழுதி
விட்டேன்."

இது ஒரு நேர்காணலில்
அசோகமித்ரன் அவர்கள் சொன்னது.
இது இந்து மதத்தின்
அடி மனத்து தத்துவம்.
குழந்தைகள் பூக்கள்.
குழந்தைகள் தெய்வங்கள்.
அதெல்லாம் சரி தான்.
ஆனால் அந்தக் குழந்தைகளை
அங்கங்கே வீசிவிட்டு
என்னுடன் வா
என்று
முனிபுங்கவர்கள்
தங்கள் பத்தினிகளை
இழுத்துக்கொண்டு போனதை
சினிமாக்களில் பார்த்திருக்கிறேன்.
தம் படைப்புகள்
வெறும் ரத்த சதையாலான
மாம்சங்கள்.
பிரம்மம் எனும்
எல்லாம் இறந்த (கடந்த)
நிலைக்குப்போக
இடைஞ்சல்களாக இருப்பவை இவை.
இவற்றை விட உயர்ந்த
அந்த மாம்சம் (மீ மாம்சம்)
அடைவதே முக்தி.
இந்த இந்து அடிப்படைவாதமே



எல்லாவற்றையும்
மறுக்கும் வெறுக்கும் காரணிகள்
ஆகிப்போகின்றன.

அசோகமித்திரனுக்கு
அவருடைய
"கரைந்த நிழல்கள்"
ஏன் பிடிக்கவில்லை என்பதற்கு
விரிவான "நேர்காணல்கள்"பற்றிய
விவரம் எதுவும் கிடைக்கவில்லை.
இருப்பினும்
ஜெமினி ஸ்டுடியோவில்
அமரர் வாசன் அவர்கள் குறிப்பிட்டது போல்
எழுத்தாளனுக்கு தனிப்பகிர்வாக
இலக்கியம் படைக்கும் வேலையில்லை.
அவர் திரைப்படங்களுக்கு
"கதை இலாகாக்களே"
முக்கிய ஆணிவேர்.
அப்படி அந்த ஸ்டுடியோவில்
அந்நியப்பட்டுப்போன உணர்வை
"கரைந்த நிழல்களில்"அவர் காட்டியிருக்கலாம்.
ஆயினும்
மிக மிக இலக்கியத்தரம் வாய்ந்த
நாவல் எதுவென்றால்
கரைந்த நிழல்கள் மட்டுமே.
ஒரு நாவலை
அப்படியே வரிக்கு வரி காட்டும்
திரைஇலக்கியத்தை
காட்டிய படைப்பாளிகள்
சத்யஜித்ரே..அடூர் கோபாலகிருஷ்ணன்
போன்றவர்கள் மட்டுமே ஆகும்.
எனவே அவரது
கரைந்த நிழல்களில்
எழுத்தின் உயிர்ப்பு
சினிமாக்கதைகளில் வசூல்களால்
கரைந்தே போய்விடுகின்றன
என்பதை உட்கருத்தாய் அல்லது ஏக்கமாய்
சொல்லியிருக்கலாம்.
நிழல் என்பதே "ஒன்றின் நிழல்" தான்.

ஆனால்
நிழலின் நிழல் என்றால்
அதன் நாளத்துடிப்புகள்
அதன் பசித்தீயின் நாக்குகள்
அதன் அவமான அவலங்கள்
எல்லாம்
எப்படியிருக்கும் என்பதே
அவரது அந்த உயிரோட்டமான நாவல்.
திரைக்குப்பின்னே
திரைக்குப்பின்னேயும் இருக்கிற
திரைக்குப்பின்னே
மீண்டும் மீண்டும்
இப்படி பலத்திரைகள்
உரிக்கப்பட்டதற்குப் பின்னே
உள்ள
அந்த ரத்தம் வடியும் காயங்களின்
நிர்வாணமே அந்த நாவல்.
நிழல் தரும் ஆலமரம் அந்தத் தயாரிப்பாளர்.
அவர் தலைமறைவாகி விடுகிறார்.
நிழல்களின் காலை வெட்டிவிடுவதைப்போன்ற
அவற்றின் முகங்களையே அகற்றிவிடுகின்ற
ஒரு சூன்யத்தின் அவஸ்தைகளை
எழுத்துகளுக்குள் மின்சாரம் பாய்ச்சியிருக்கிறார்.
அறுபதுகளின் உயர்ந்த எழுத்தாளர்.
எழுத்துக்களை ரத்த சதையாக்கியவர் அசோகமித்திரன்.
எத்தனையோ நூற்றாண்டுகளுக்கு உயிர்த்து
தளும்பும் எழுத்துகளின்
அணைக்கட்டுகள் அவர் படைப்புகள்.
அந்த அசோகன் கல்வெட்டுகளில் இருக்கிறார்.
இந்த அசோகன் சொல்வெட்டுகளில்
தன்னைச் செதுக்கிக்கொண்டிருக்கிறார்

கவிஞர் ருத்ரா இ.பரமசிவன்
ruthraasivan@gmail.com

.

18. ஒரு ஃபோட்டோ நெகடிவ்

ருத்ரா இ.பரமசிவன்

உன் வாழ்க்கையின்
ஒரு ஃபோட்டோ நெகடிவ்
உன் மன ஆழத்தில்.

அதை நீ எல்லோருக்கும்
ப்ரிண்ட் போட்டு காட்டமுடியாது.
உன் முகம் ரோஜாதான்
உன் வானம் பளிங்கு நீலம் தான்
ஆனாலும் உன்
சட்டைகளையெல்லாம்
உரித்துப்போட்டு விட்டு காட்சி கொடுக்க முடியாது.

சித்தர்கள் சமணத்துறவிகள்
அழகாய் நம் மீது பின்னல் வேலை போடும்

அந்த ஐம்பொறிகளைக்கூட
களைந்து வீசி விட்டவர்கள்.

அவர்கள் எதையோ தேடுகிறார்கள்!
அதற்காக
அம்மண சாமியார்களாய்
அலைந்து திரிந்து
கல்லடி பட்டார்கள்.

நாம் நாகரிகத்தின்
நுனிக்கொம்பர் ஏறியபின் கண்டோம்
நம் அசிங்கமான நிர்வாணத்தை.
ஆணும் ஆணும் அல்லது
பெண்ணும் பெண்ணும்
சேர்ந்தால் என்ன என்று?

நம் புராணங்களின் இடுக்கு சந்துகளில்
இது இருந்தாலும்
இது மீண்டும் நம்மை மரமேறிகளாக
மனிதனை மனிதன் பச்சையாக
பிய்த்துத் தின்றுவிடும் நிகழ்வுகளை
அரங்கேற்றிவிடுமோ என்ற அச்சமே
நம்மைத்தடுக்கும் சுவர் ஆக இருக்கிறது.

பொருள்களின் அதிகப்படியான இன்பம்
அலுப்பு தட்டி விடுகிறது.
"லா ஆ்ஃப் டிமினிஷிங் யுடிலிடி" என்று
ஆல்ஃப்ரட் மார்ஷல் கூறுகிறார்.
இதை உள்ளுணர்ந்து பொருளாதார முதலாளிகள்
விளம்பரத்தின் மூலம்
அதே பொருளை பல்வேறு முகமூடிகளில்
நுழைத்து
நுகர்வோர்களுக்குள் ஒரு
"ஆர்டிஃபிசியல் இமேஜினரி செண்டிமெண்டல் அட்டாச்மெண்டை"
அதாவது "கற்பனையான செயற்கை ஈர்ப்பின் ஒட்டுதலை"
தங்கள் பொருள்கள் மீது பாய்ச்சுகிறார்கள்.
டிவிகளில்
இதற்குத்தான் அந்த "வண்ண ஒளி"க்கசாப்புகள்
நடத்தப்படுகின்றன.

ஆனால் இரண்டு (ஆண் பெண்)மனங்கள் இடையே
அத்தகைய செயற்கை பூச்சுகள் இயலாது.
அதற்காக பாரம்பரியம் அது இது என்ற
போலி பாவ்லாக்களை
மிக மிக உச்சிக்குப்போன நாகரிகம் ஏற்றுக்கொள்வதில்லை.

அதனால் தான் ஆண் ஆண் அல்லது பெண் பெண்
சேர்ந்து கொண்டு வாழும் ஒரு
படிமத்துள் படிந்து கொள்ள நினைக்கிறார்கள்.
அதே "அலுப்பு" என்னும் உலுக்கு விசையின்
ஒரு பூகம்பம் வரும் வரைக்கும்
அதுவே "அல்ட்ரா" நினைப்புகள் ஆகும்.

புணர்வுகளில்
முதலில் நிகழ்வது
மனங்களின் புணர்வுகள்.
அது இருவர் இடைப்பட்டது மட்டும் அன்று.
உலக மனிதங்களின்
எலலா இதயங்களும்
ஒரே தகட்டில் லேமினேட் செய்யப்படுவது.
அந்த சாந்தி முகூர்த்தை தேடித்தான்
இந்த அம்மண சாமியார்களும் ஓடுகிறார்கள்.
தங்கள் ஆழ்நிலை சிந்தனையின் அடுக்குகளை
பாடல்களின்
மேளங்கள் தட்டிக்கொண்டு
செல்கிறார்கள்.

அந்த திசைகள் கழன்ற வெளியில்
அதற்கு அடையாளமாய்
ஏதோ ஒன்றை
"நட்ட கல்லாக்கி நாலு புஷ்பம் சாத்தி
சுற்றி வந்து மொணத்து மொணத்து"
மந்திரங்கள்
தந்திரங்கள்
எந்திரங்கள்
என்று என்னவெல்லாமோ செய்கிறார்கள்.

பரிணாம விசை ஒன்று தான்

பஞ்ச பூதங்களையெல்லாம்
பூச்சாண்டி காட்டி
மிரட்டிக்கொண்டிருப்பது.
மனித வளர்ச்சி
அறிவுகளின் "புணர்வுகளில்"மட்டுமே
நிலைத்து நிற்பது.

உணர்ச்சித்தீக்களின் புணர்வுகளில்
மிஞ்சும் சாம்பல்களிலிருந்து
ஃபீனிக்ஸ்களும் சிறகு முளைத்து
வெளி வரலாம்.
ஆயினும்
உலக மானிடம்
எனும் மௌன உந்து விசையே
பரிணாமத்தின் மைல் கற்களை நட்டு
முன் முன் செல்கிறது.

"உலகத்தோடு ஒட்ட ஒழுகல் பலகற்றும்
கல்லார் அறிவிலா தார்."

கவிஞர் ருத்ரா இ.பரமசிவன்
ruthraasivan@gmail.com

19. ஞான ஒளி

ருத்ரா இ.பரமசிவன்



கடவுள் என்றால் என்ன
என்ற கேள்வி தான்
இன்னும் இவர்களின்
பாஷ்யங்களில்
தொங்கிக்கொண்டிருக்கும்
அறிவின் தொப்பூள் கொடி.
ஆனால்
அதை அறுத்து எறியும் விதமாய்
இவன் தான் கடவுள்
இவன் தான்
நான்கு வர்ணம் சொன்னான்.
நான்காவது வர்ணம்
மூன்றின் கீழ் நசுங்கிக்கிடப்பதே
கடவுள் வேதம் எனச்சொல்வது
அநாகரிகங்களின்
அயோக்கியத்தனங்களின்
சிகரம் ஆகும்.

அதுவே சாஸ்திரம் ஆகி
மானுடத்தை படுகொலை செய்யவந்தது.
மானுடத்தை கசாப்பு செய்ய
இத்தனை சமஸ்கிருத வாந்தியெடுப்புகளா?

வேதங்கள்
அழகிய வாக்கியங்களாய் தான்
இருப்பதாய்
கூச்சல் போடுகிறார்கள்!
ஆனால்
அதற்குள் இருப்பது
"அந்த தாஸர்களை வெட்டிகொல்லு"
ஓ! இந்திரா!
இந்த சோமபானத்தைக்குடித்து
சுருதியேற்றிகொள்.
அந்த "தாஸர்கள் கட்டிய அணைகளை அடித்து நொறுக்கு"
என்ற
கசாப்புகளின் வெட்டரிவாள்கள் தான்.
வேதங்கள் ஒலிக்கும் முன்பேயே
இருந்த மண்ணின் மைந்தர்களை
நோக்கிப் பாயும் நச்சு வரிகளே
வேதாந்த பாஷ்யங்கள்.
மனு தர்மம் சொல்லும் அந்த நான்காம் வர்ணமே
தாஸன் என்பது.
அதற்கும் கீழே இருப்பவன் "பஞ்சமன்"
அவன் பூமியில் இருக்கவே கூடாது
என்பது வேதங்களின் சாரம்.
அதன் அடியில் பூத்த
நாய்க்குடைக்காளான்களே
மனுதர்ம சாஸ்திரங்கள்.

ஆனாலும் பாருங்கள்
இந்த தந்திர வரலாற்று சாகசங்களை.
தமிழர்கள் இன்றும்
இந்த மந்திரங்களைக்கொண்டு
தங்களையே சிரச்சேதம் செய்துகொள்ளும்
மடமையில் தான்
மக்கி அழிந்து கொண்டிருக்கிறார்கள்.

அதனால் தான்
தமிழ்
மொழியாக இருப்பதை விட
ஒரு உளியாக இருக்கவேண்டும்.
இந்த மரணப்பாறைகளை
வெட்டிப்பிளக்கும்
வழியும் அதில் இருக்கவேண்டும்.
சமுதாய அறிவியலின்
ஞான ஒளியும் அதில் தெறிக்கவேண்டும்!
தமிழே!
பொங்கும் சுடராய்
எங்கும் பரவுக!

கவிஞர் ருத்ரா இ.பரமசிவன்
ruthraasivan@gmail.com

தமிழ் மரபு அறக்கட்டளையின் வெளியீடுகள்

தமிழ் மரபு அறக்கட்டளையின் - மின்னூல்கள்:

பகவதஜ்ஜூக அங்கதம் (மகேந்திரவர்ம பல்லவ மன்னன் எழுதிய அங்கத நாடகம்)

தமிழ் மரபு அறக்கட்டளையின் - மண்ணின் குரல் மரபுக் காணொளிகள்:

[http://video-thf.blogspot.de/

1. மதுரை அமெரிக்கன் கல்லூரி கல்வெட்டு பயிற்சி - தொடக்கவிழா (2/4/2017)
2. பறையிசை நடனம் (2/22/2017)
3. திருக்குறள் ஐரோப்பிய மொழி பெயர்ப்புக்கள் - சுபாஷிணி (2/26/2017)
4. சமணமலை - மதுரை (3/5/2017)
5. கோரிப்பாளையம் தர்கா, மதுரை (3/12/2017)
6. தென்பரங்குன்றம் கன்னிமார் கோயில் குலதெய்வங்கள் வழிபாடு (3/18/2017)
7. திருப்பரங்குன்றம் சிகந்தர் பாதுஷா ஷஹீத் வலியுல்லாஹ் தர்கா (3/26/2017)
8. தென்பரங்குன்றம் உமையாண்டவர் குடைவரைக் கோயில் (4/1/2017)
9. கொற்கை (4/8/2017)

தமிழ் மரபு அறக்கட்டளையின் - மண்ணின் குரல் மரபுக் ஒலிப்பதிவுகள்:

[http://video-thf.blogspot.de/

1. தமிழ் மரபு அறக்கட்டளை - SBS வானொலி பேட்டி
2. வட்டார வழக்கு: திருநெல்வேலி பேச்சு வழக்கு - பகுதி 4
3. வட்டார வழக்கு - ஒப்பாரிப் பாடல்கள் -ஆண் பாடகர்
4. வட்டார வழக்கு: நகரத்தார் பேச்சு வழக்கு - பகுதி 3
5. வர்ண ஆடை குழலூதி
6. வட்டார வழக்கு: நகரத்தார் பேச்சு வழக்கு - பகுதி 2
7. வட்டார வழக்கு: நகரத்தார் பேச்சு வழக்கு - பகுதி 1
8. 21.1.2017 - கோலாலம்பூரில் நடைபெற்ற த.ம.அ கருத்தரங்கம்
9. வட்டார வழக்கு: திருநெல்வேலி பேச்சு வழக்கு - பகுதி 3
10. வட்டார வழக்கு: திருநெல்வேலி பேச்சு வழக்கு - பகுதி 2
11. வட்டார வழக்கு: திருநெல்வேலி பேச்சு வழக்கு - பகுதி 1
12. நாட்டுப்புறக் கதைகள்
13. கொங்கு நாட்டு பழமொழிகள்!
14. Avvaiyar - அவ்வையின் ஆத்திசூடி
15. கும்மிப் பாடல்கள்

தமிழ் மரபு அறக்கட்டளையின் - வரலாறு கேட்போம்.. வலையொலி வழி!:

[http://thf-podcast.blogspot.com/]

1. தமிழ் நாட்டின் தலை சிறந்த பெண்மணிகள்: முத்துலெட்சுமி ரெட்டி
2. பூஜாங் பள்ளத்தாக்கு - கடாரமும் அதன் வரலாறும்
3. திருவாசக சிற்றாராய்ச்சி (பாகம் 1,2,3)
6. பண்டைய தமிழக நெடுஞ்சாலைகள்
7. சங்ககால சோழர் பரம்பரை
8. சிஸ்டர் சுப்புலட்சுமி
9. சுங்கம் தவிர்த்த முதலாம் குலோத்துங்க சோழன்

தமிழ் மரபு அறக்கட்டளையின் - தமிழ்ப் பொழில் மின்னிதழ்கள்:

[http://thfreferencelibrary.blogspot.com/]

தமிழ்ப் பொழில் (1937-1938) துணர்: 13 - மலர்: 3

தமிழ் மரபு அறக்கட்டளையின் - கட்டுரை வெளியீடுகள்

மூவர் தமிழ் (பதிவுகளின் தொடர்ச்சி) & நடுத்தரக் கல்வி முறையின் மறுஅமைப்பு

(cc) BY-SA

THE TEXT IN THIS ISSUE BY Tamil Heritage Foundation IS LICENSED UNDER A CREATIVE COMMONS ATTRIBUTION-SHAREALIKE 4.0 INTERNATIONAL LICENSE.

Tamil Heritage Foundation
தமிழ் மரபு அறக்கட்டளை

Electronic preservation of Tamil heritage materials
e-Book series
an international NGO initiative to digitize old Tamil books
and palm leaf manuscripts
visit http://www.tamilheritage.org

தமிழ் ஓலைச்சுவடிகள், நூல் பாதுகாப்பு.

பாதுகாப்பற்ற நிலையில், மறுபதிப்பு காணாத பழைய நூல்கள், ஓலைச்சுவடிகள் போன்ற தமிழ் முதுசொம்களை மின்பதிப்பாக்கி தமிழ் வளத்தை நிரந்தரமாக்கும் ஒரு சர்வதேச தன்னார்வ முயற்சி.

மேலும் அறிய: http://www.tamilheritage.org

முதுசொம் முத்திரை
தமிழ்ப்பாதுகாப்பின் அக்கறை

மின்தமிழ் மேடை

“வரலாற்றை அழிவினின்று காப்போம்”

தமிழ் மரபு அறக்கட்டளை (www.tamilheritage.org)

வெளியிடும் காலாண்டு மின்னிதழ்

மின்தமிழ்மேடை - காட்சி: 9

ஏப்ரல் – 2017

9